# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

மார்ச் 12 - 18, 2014 பக்கம் - 24 30/-



# கர்ப்பக்கிரகத்தில் காமப் பூசை

## யாழ்ப்பாணத்தில் நடந்த உண்மைச் சம்பவம்

1717 FOLLOW US www.mobitel.lk

மத்திய கிழக்கு உட்பட 50 நாடுகளுக்கு

ரூ.100 இற்கு ரீலோட் செய்து 2 IDD நிமிடங்களை 50 சதம் வீதம் அனுபவியுங்கள்

விஷேட அழைப்புமுறை தேவைப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 433

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையின் நகர்வு



தென்னாபிரிக்க கிரிக்கெட் மிக இக்கட்டான நிலையில் இருந்த போது அதன் டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு கிரேக் ஸ்மித்தின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது எல்லோரின் புருவங்களும் உயரவே செய்தன. ஏனெனில் அடிமேல் அடியாக வாங்கி தென்னாபிரிக்க அணி துவண்டிருந்த சமயத்தில் ஓரிரண்டு போட்டிகளே விளையாடிய அனுபவம் கொண்ட ஸ்மித் அதுவும் வெறும் 22 வயதேயான வீரர்- தலைமைப்பதவிக்கு பொருத்தமானவர் தானா? என்ற சந்தேகமே இதற்குக் காரணம்.ஆனால் தன்னுடைய துடுப்பாட்டத்தால் மட்டுமல்ல அணியை மீண்டும் ஒருங்கிணைத்து டெஸ்ட், ஒருநாள், 20/20 ஆகிய போட்டித் தரவரிசைகளில் ஒரே நேரத்தில் முதலிடத்தை தென்னாபிரிக்கா அணிக்கு பெற்றுக் கொடுத்தார் ஸ்மித்.தன்னைத் தேர்வு செய்தவர்களின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்த ஸ்மித், பதவிக்காக அணியில் ஒட்டியிருப்பதை விரும்பவில்லை. யாரும் வற்புறுத்தாமலே 20/20 போட்டிகளில் இருந்தும், ஒருநாள் போட்டி அணியின் தலைமைத்துவத்தில் இருந்தும் ஒதுங்கி இளையவர்களுக்கு வழிவிட்டார். இப்போது ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரோடு தன்னுடைய கிரிக்கெட் வாழ்வுக்கு விடைகொடுத்துவிட்டார். அணிக்கு மலைபோல இருந்து வெற்றிகளைத் தேடிக்கொடுத்ததோடு, அடுத்த தலைமைத்துவத்துக்கான வீரர்களையும் அவர் வளர்த்தே விட்டுள்ளார். அம்லா, டி வில்லியர்ஸ், பிளஸிஸ் என தென்னாபிரிக்காவைத் தாங்கி நிற்கும் தூண்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு நகர்ந்து சென்றுள்ளது ஸ்மித் என்னும் மலை.

## 20/20 கிண்ணம்: வெல்லப்போவது யார்?


மார்ச் 16 ஆம் திகதி உலகக்கிண்ண 20/20 போட்டிகள் பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ளன. கிண்ணத்தைச் சுவீகரிக்கும் நோக்கோடு எல்லா அணிகளும் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றன. கடந்தமுறை மயிரிழையில் கிண்ணத்தைக் கோட்டைவிட்ட இலங்கை அணி ஆசியக்கிண்ணப்போட்டிகளில் பங்களாதேஷில் சாதித்ததால் இம்முறையும் கிண்ணம் வெல்ல வாய்ப்புண்டு. அதேசமயம் தற்போதைய சம்பியனான மேற்கிந்திய அணி, 20/20 போட்டிகளுக்கென நிபுணத்துவம் வாய்ந்த கெய்ல், பொலார்ட், ப்ராவோ, சுனில் நரேன் , சமி போன்ற வீரர்களைக் கொண்டுள்ளதால் அந்த அணிக்கும் வெல்லும் திறன் உண்டு. ஆனால் பலரது கணிப்பின் படி இந்தமுறை இவ்விரண்டு நாடுகளையும் தவிர்த்து வேறொரு நாடே கிண்ணத்தை வெல்லும் என்று கூறப்படுகிறது. ஆசிய நாட்டில் நடப்பதால் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூஸிலாந்து போன்ற நாடுகள் வெல்வது கடினம். எனவே இந்தியா அல்லது பாகிஸ்தானே 20/20 உலகக்கிண்ணத்தை வெல்லக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் கணிப்புகளெல்லாம் நடப்பதில்லையே. யார் கண்டது ஆப்கானிஸ்தான் கூட சிலவேளைகளில் கிண்ணத்தை தட்டிக் கொண்டு போகக்கூடும்.

## இன்னொரு பரிசு




5 ஆவது முறையாகவும் ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கிறது இலங்கையணி. இதன் மூலம் அதிக தடவைகள் ஆசியக் கிண்ணத்தை வென்ற அணி என்ற சாதனையை இந்தியாவோடு இலங்கையும் பகிர்ந்து கொண்டுள்ளது.

வழக்கம் போல ஒரு போட்டியில் எழுச்சி பெற்றுவிட்டு, மற்றைய போட்டியில் அதலபாதாளத் தோல்வியைச் சந்திக்கும் போக்கை இலங்கை மாற்றியமைத்து, திட்டமிட்டு ஒருங்கிணைந்து விளையாடியதாலேயே அது வாகை சூட முடிந்துள்ளது. குறிப்பாக அணியின் மூத்த வீரர்களும், இளையவர்களும் மாறி மாறி தம் பங்கை ஆற்றியிருந்தார்கள். மஹெல ஜெயவர்த்தன லீக் போட்டிகளில் சொதப்பியிருந்தாலும் இறுதிப்போட்டியில் இக்கட்டான வேளையில் அரைச்சதம் அடித்து அணியைக் கரைசேர்த்தார். சங்ககார, மத்தியூஸ் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இருவரும் பொறுப்புணர்ந்து சகலபோட்டிகளிலும் விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு கொண்டு சென்றனர்.லசித் மலிங்க இரு போட்டிகளில் தன் வேகத்தை காட்டி மீண்டும் இலங்கையின் சிங்கம் தானே என நிரூபித்தார். இந்தமுறை ஆசியக் கிண்ணம் இலங்கைக்கு அளித்த மற்றொரு பரிசு லஹிரு திரிமன்னே தான். ஏற்கனவே அவர் இலங்கை சார்பாக திர்மன்னே விளையாடியிருந்தாலும் அவரின் போராடும் ஆற்றலும் தன்னம்பிக்கையும் இந்தத் தொடரில்தான் வெளிப்பட்டுள்ளன. ஆசியக் கிண்ணத் தொடரில் இரண்டு சதங்களை விளாசி தொடர் நாயகன் விருதையும் அவர் தனதாக்கி கொண்டார். டில்சானின் இடைவெளியை திரிமன்னே சிறப்பாகவே நிரப்பியிருந்தார். எதிர்காலத்தில் அவர் இன்னொரு சங்ககாரவாக உருவெடுப்பார் என கிரிக்கெட் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.



## மயக்கம் தீருமா மைக்கல் ஷூமேக்கருக்கு?

உலகம் மைக்கல் ஷூமேக்கரை மறக்கத் தொடங்கிவிட்டது. அதிக தடவைகள் போர்முலா-1 கார்ப்பந்தயத்தில் வென்று சாதனை படைத்த மைக்கல் ஷூமேக்கர், 2013 டிசெம்பர் மாதம் கிறிஸ்மஸ் விடுமுறையின்போது பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்தார். அப் போது எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளான போது அவரது தலையில் பலமாக அடிபட்டது. இதனால் கோமா நிலைக்கு சென்ற மைக்கல் ஷூமேக் கர் இன்னும் கண் திறக்கவில்லை. குழாய் வழியாகவே அவருக்கு உணவு வழங்கப் படுகின்றது. " அவர் எங்கள் மீது மிகவும் பிரியமானவர். எனவே எங்களை விட்டு அவர் எங்கும் செல்லமாட்டார். மிக விரைவில் அவர் கண் திறந்து உரையாடுவார். அந்த நாளுக்காக எல்லோரும் காத்திருக்கிறோம்" என்று சொல்கிறார் ஷூமேக் கரின் மனைவியான கொரின்னா. மைக்கலின் உடல்நிலையில் குறிப் பிடத் தக்க முன்னேற்றம் காணப்படுவதாக மருத்துவர்களும் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். எனவே மீண்டும் புயல் வேக வீரன், வாழ்க்கைப் பயணத்தினை தொடங்கவருவான் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் தோன்றியுள்ளது. இந்த நிலையில் ஷூமேக்கரை ஊடகங்கள் கண்டுகொள்ளாமல் அவரை மறக்கடிக்கும் வேலைகளில் இறங்கியுள்ளதாக அவரது ரசிகர்கள் கொந்தளிக்கவும் செய்கிறார்கள்.

## அந்தோ அஷரென்கா!



பெலாரஸ் நாட்டு அழகுப்புயல் அஷரென்கா ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் பங்கேற்க முடியாத அளவுக்கு விதி சதி செய்துவிட்டது. கடந்த 8 ஆம் திகதி அவர் பரிபாஸ் தொடரில் விளையாடிக் கொண்டிருந்தார். வெற்றி அஷரென்கா பக்கமே இருந்தது. இந்த நிலையில் அவர் எம்பிப் பாய்ந்து பந்தை அடிக்க முயன்ற போது, கால் எக்குத் தப்பாக நிலத்தில் மோதிவிட காயமடைந்தார். களத்திலேயே வெக்க துக்கம் பாராமல் அழுது ஆர்ப்பாட்டம் செய்துவிட்டார். அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது காலில் உட்காயம் ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனால் ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் உள்ளிட்ட சில தொடர்களில் அஷரென்கா பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விக்ரோறியா அஷரென்கா 2 முறை ஆஸி ரென்னிஸ் கிண்ணத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறாத முட்கள்

அக்கினிபுத்திரன்

**அ**ண்மையில் அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதியாகிய உடுகம புத்தரகிந்த தேரர் நயினாதீவு நாகதீபத்துக்கு பயணம் செய்திருந்தார். இந்தப் பயணத்தை முடித்தபின் அவர் நல்லை ஆதினத்துக்குச் சென்று அதன் ஆதினகர்த்தா சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதி, வெளிநாட்டு ராஜதந்திரிகள் உட்பட எந்த ஒரு பிரமுகரும் கூட மல்வத்தை , அஸ்கிரிய பீடாதிபதிகளை அவர்களின் மத பீடங்களுக்கும் சென்று சந்திப்பதே வழமை. இந்த இரு பீடாதிபதிகளும் எவரையும் சென்று சந்திப்பதென்பது அபூர்வமான விடயம் தான்.

இப்படியான நிலையில் அஸ்கிரிய பீடாதிபதி நல்லூர் ஆதினத்துக்குச் சென்று அதன் முதல்வரைச் சந்தித்தமை அதிசயம் தான்.

எனினும் அப்படி ஒரு சந்திப்பு இடம்பெற்று விட்டது. இதன் போது சோமசுந்தரப் பராமாச்சாரியர் சில விடயங்களை ஆணித்தரமாகத் தேரரிடம் முன்வைத்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகப்பற்றற்ற பௌத்த மத ஆலோசகராகிய அவரிடம் சில கருத்துக்கள் முன்வைக்கப்படுவது ஒரு அவசியமான தேவையாகும்.

வடபகுதியிலிருந்து படையினரை அகற்றுவது, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது போன்ற விடயங்களுடன் நல்லை ஆதீனகுரு இன்னொரு முக்கிய விடயத்தையும் முன்வைத்தார்.

அதாவது தேரரிடம் ஆசிபெற வரும் அரசியல்வாதிகளை இனக்குரோத, மதவிரோத, நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமென தேரர் ஆலோசனை வழங்க வேண்டுமென நல்லை ஆதினகுரு கேட்டுக் கொண்டார்.

இன்று இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதுகாப்புச் செயலாளர் உட்பட சகல இனவாத அரசியல்வாதிகளும் அஸ்கிரிய பீடத்தில் சென்று ஆசி பெறுபவர்கள் தான். பீடாதிபதி அவர்களுக்கு நேரடியாகவும், ஊடகங்கள் மூலமாகவும் ஆலோசனை வழங்குவதுண்டு.

இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பது அல்லது நீக்குவது தொடர்பாக தன்னால் எதுவும் செய்ய முடியாதெனவும் , ஏனைய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக அஸ்கிரிய பீடாதிபதி வாக்குறுதியளித்திருந்தார்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவே எந்த ஒரு கண்டனத்தையும் வெளியிடாத அஸ்கிரிய பீடாதிபதி இப்படி ஒரு வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

அதாவது முட்களும் தன் முனைகளை மழுங்கடித்து நிறம் மாறிவிடும் போல ஒரு தோற்றப்பாடு வெளிப்பட்டது. சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் என்ற பெயரில் ஜனாதிபதியின் இந்து மத ஆலோசகரான பாபு சர்மா அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருகின்றார். இந்த வேளையில் நல்லூர் ஆதினத்தின் குரல் சிங்களத்தின் வலிமையான சக்தியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மதபீடங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தென்னிலங்கையினரிடமும், சர்வதேச சமூகத்திடமும் முன்வைக்கும் போது நல்லூர் ஆதினத்தின் கோரிக்கைகள் மேலும் வலிமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

ஆனால் முட்கள் நிறம் மாறுவதாகத் தெரியவில்லை. வடக்கிலிருந்து திரும்பிய பின்பு அஸ்கிரிய பீடாதிபதியிடம் ஆசி பெறச் சென்ற ஜே.வி.பி தலைவர் அனுர குமார திசாநாயக்காவிடம் சிங்களவர் வாழ வேறு நாடு இல்லையென்றும் நாட்டைப் பாதுகாப்பது அவசியமெனவும் ஆளும் கட்சியின் குற்றங்களை சர்வதேசத்திடம் முறையிட்டால் இலங்கையில் தலையீடுகளை சர்வத்தேசத்தவர் கள் மேற்கொள்வார்கள் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள் ளார்.

அதாவது சிங்களவர்களுக்கு வேறு நாடு இல்லாதபடியால் இலங்கை சிங்களவருக்கே உரிய நாடு என்பதும் அரசு செய்யும் குற்றங்களை சர்வதேசத்திடம் முறையிடாது தலை குனிந்து ஏற்கவேண்டும் என்பதே அஸ்கிரியபீடாதிபதி வலியுறுத்தும் கருத்தாகும்.

நிச்சயமாக இந்த முட்கள் நிறம் மாறப்போவதில்லை. தமிழ் மக்களை ஏமாற்ற வாக்குறுதிகளை வழங்கி விட்டு எதிர்மாறாக நடப்பதே காலம் காலமாக இவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கையாகும். அதுவே இனியும் தொடரும்.



## திருமறைக் கலாமன்றத்தின் நாடகவிழா



யாழ் திருமறைக் கலாமன்றம் இந்த மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நாடக விழா ஒன்றை நடத்தியிருந்தது. பெருந்தொகையான பார்வையாளர் மத்தியில் இருநாள்களும் ஏழுநாடகங்கள் மேடையேற்றப்பட்டன. முதல்நாள் நிகழ்வில் 'நிற்க கற்க', எட்டுமுழ வேட்டி', 'குவேனி' ஆகிய நாடகங்களும் இரண்டாம் நாள் நிகழ்வில் 'மணவிலங்குகள்', 'கடமைவீரன்' எதற்கும் ஒரு காலமுண்டு', 'சத்தியவேள்வி' ஆகிய நாடகங்களும் அளிக்கை செய்யப்பட்டன. எம்மிடையே நாடகப் பாரம்பரியம் அருகிச் சென்றுகொண்டிருக்கும் காலகட்டத்தில் இத்தகைய நாடக விழாக்கள் அவசியமானவை. காலத்தின் தேவையறிந்து தொடர்ச்சியாக பல்வேறு அரங்க அளிக்கைகளை நடத்திவரும் திருமறைக்கலாமன்றத்தின் நாடகவிழாவுக்கும் பார்வையாளர்கள் திரண்டு வந்தமை இன்னமும் நாடகக் கலைக்கு மவுசு குறையவில்லை என்பதையே எடுத்துக்காட்டியது. ,

## ஐங்கோணத் தோடம்பழம்

வழக்கமாகவே தோடம்பழம் என்றால் உருண்டையாக இருக்கும். ஆனால் எதையுமே வித்தியாசமாகச் சிந்திக்கும் ஜப்பானியர்கள் ஐங்கோண வடிவில் தோடம்பழத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்கு அவர்கள் பெரிதாக நவீன மரபணுத் தொழில்நுட்பம் எதனையும் கண்டுபிடிக்கவில்லை. மிக எளிய வழிமுறைகள் மூலமே இந்த ஐங்கோணத் தோடம்பழம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தோடம்பழம் காய்க்கும்போதே அதைச்சுற்றி ஐங்கோணவடிவில் இறுக்கமாக மட்டைகள் கட்டப்படும். எனவே தோடங்காயின் பருமன் பெரிதாகும்போது தன்னுடைய வழக்கமான வடிவத்தை விடுத்து சுற்றிவரக் கட்டப்பட்டுள்ள ஐங்கோண வடிவுக்கு ஏற்ப வளர ஆரம்பிக்கும். பழங்கள் முதிர்வடையும்போது படத்தில் உள்ளது போன்று ஐங்கோண வடிவத்தில் அது கிடைக்கும்.

ஜப்பான் விவசாயிகளின் இந்த ஐங்கோணத் தோடம் பழத்துக்கு பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளதை அடுத்து உலக நாடுகள் பலவற்றிலும் ஏனைய விவசாயிகளும் இதே முறையைக் கையாண்டு ஐங்கோணத் தோடம்பழங்களை உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.



© The Asahi Shimbun via Getty Imag



© The Asahi Shimbun via Getty Imag


**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கில் 4¾ பரப்புக் காணியில் புதிய Planஇல் கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு. பயன்தருகின்ற 20 தென்னை, மா, வேம்பு அமைதியான, பாதுகாப்பான அயல் குறிப்பிடத்தக்கது. விலை 35 இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா.

(45397)(7.6.3) தொடர்பு: 077 391 4739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யப் பூச்சாண்டி பலிக்குமா?

நீலன்

உக்ரேனில் இடம்பெற்றுவந்த மேற்குலக சார்புடைய தேசியவாதிகளின் ஆர்ப்பாட்டம் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. தமக்கு விசுவாசமான படைவீரர்களின் துணையுடன் உக்ரெய்ன் அதிபர் விக்டர் ஜனுகோவிச் தப்பித்துச் சென்ற பின்னர் உக்ரேனில் உக்கிரம் ஓய்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தப்பிச் சென்ற ஜனுகோவிச் ரஷ்யாவில் தஞ்சம் கோரியுள்ளார். அவர் இனி வரவேமாட்டார் என்ற நினைப்பில் புதிய இடைக்கால அரசு ஒன்றும் உக்ரேனில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் "உக்ரேன் இடைக்கால அரசு சட்டபூர்மானது அல்ல. மிக விரைவில் உக்ரேனில் எனது ஆட்சி தொடங்கும்" என்று விக்டர் ஜனுகோவிச் சூளுரைத்தபோது அதை எவரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. மாறாக "விக்டர் ஜனுகோவிச் மீது போர்க் குற்றம் சுமத்தி அவரை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப் போகின்றோம்" என்று இடைக்கால அரசின் தலைவர்கள் தங்கள் முஷ்டியை முறுக்கினர். ஆனால் திரைப்படங்களில் வருவது போன்று எதிர்பாராத திருப்பம் ஒன்று உக்ரேனில் ஏற்பட்டுள்ளது.

## ரஷ்யப்படைகளின் உள்நுழைவு

விக்டர் ஜனுகோவிச்சுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்கிவிட்டது. முன்னரும் அவருக்கு ஆதரவாகவே ரஷ்யா செயற்பட்டு வந்தது. அதனால்தான் விக்டர், நிலைமை கையை மீறிப்போவதை உணர்ந்து ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றார். அரசியல் தஞ்சம் வழங்கிய ரஷ்யா இராணுவ உதவியையும் இப்போது விக்டர் ஜனுகோவிச்சுக்கு வழங்க முன்வந்துள்ளது.

உக்ரேய்னின் ஆட்சிக்கு உட்பட்ட கிரிமியா என்ற சுயாட்சிப் பிராந்தியத்தைப் முற்றுகையிட்ட ரஷ்யப்படைகள் அங்குள்ள அரச கட்டடங்களில் ரஷ்யாவின் தேசியக் கொடிகளை ஏற்றியிருக்கிறார்கள். அதிலும் அங்குள்ள ஏவுகணைத் தளங்களையும் ரஷ்யப்படைகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

இதைவிட உக்ரேன் இடைக்கால அரசுக்கு எதிரான மக்கள் போராட்டங்களும் தலைதூக்கியுள்ளன. உக்ரேனின் நெருக்கடி என்பது ஆட்சி மாற்றத்தைக் கோரி நிற்கும் மக்கள் எழுச்சிப் போராட்டமாக மாத்திரம் இருந்திருந்தால் ஜனுகோவிச்சின் வெளியேறுகையுடன் எல்லாமே முடிந்திருக்கும். ஆனால் இது மேற்குலகுக்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான ஆதிக்கப் போரின் புதிய பரிணாமம் என்பதால் கிரிமியா பிராந்தியம் வரை பிரச்சினை நீடிக்கிறது.

## புடினின் நெடுங்காலக் கனவு

சோவியத் ஒன்றியத்தைப் போன்றதொரு பிராந்திய அமைப்பை ஏற்



படுத்தி அதற்குள் உக்ரேன் உள்ளிட்ட நாடுகளை உள்வாங்க வேண்டும் என்பதே ரஷ்யத் தலைவர் விளாடிமிர் புடினின் கனவாக உள்ளது. ஆனால் ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரையில் , ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் உக்ரேனிய தேசத்தை ஈர்த்துக் கொண்டு ரஷ்யாவைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே நீண்டகால இலட்சியமாக இருந்து வருகின்றது.

இந்த இடத்தில் உக்ரேனிய பூகோளவியலை ஆராய்வது அவசியமாகிறது.

உக்ரேனில் பல இனத்தவர்கள் வசிக்கிறார்கள். அதில் உக்ரேனிய மொழி பேசும் உக்ரேனிய இனத்தவர்கள் மேற்கில் செறிந்திருக்கிறார்கள். கிழக்கில் ரஷ்ய மொழி பேசும் ரஷ்ய வம்சாவளி உக்ரேனியர்கள் அதிகம். அதிலும், கிரிமியா பிராந்தியத்தில் இருப்பவர்கள் ரஷ்யர்கள். மேற்கில் செறிந்து வாழும் உக்ரேனிய இனத்தவர்கள் ஐரோப்பிய கலாசாரத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாகத் திகழ்கையில், கிழக்கில் உள்ளவர்கள் மத்தியில் ரஷ்யாவின் தாக்கமே அதிகமாகத் தென்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் மேற்குலக சக்திகள் மேற்கில் வாழும் உக்ரேனியர்கள் மத்தியில் தேசிய வாத உணர்வைத் தூண்டி ரஷ்ய சார்புடைய விக்டர் ஜனுகோவிச்சை ஆட்சிப்பீடத்தில் இருந்து கவிழ்க்கத் துணை புரிந்திருக்கின்றன. இது ஜனுகோவிச்சுக்கு கிடைத்த தோல்வி என்பதை விடவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் கிடைத்த தோல்வி என்பதில் எதுவித ஐயமுமில்லை. சோவியத் ஒன்றியத் தில் இருந்து என்று ஐரோப்பாவு டன் சேர்ந்து கொண்ட பல நாடு களைப் போல உக்ரேனும் கைநழு விச் சென்று விடுவதைப் புடின் விரும்பவில்லை. இந்த நிலையில் புடினின் அடுத்த கட்ட நடவடிக்கை உக்ரேனின் இடைக் கால அரசைக் கவிழ்த்து மீண்டும் ஜனுகோவிச்சுக்கு முடிசூடுவதுதான்.

## பின்னடிக்கும் மேற்குலகு

உக்ரேனிய இடைக்கால அரசை பொருளாதார ரீதியில் தண்டித்தல் என்பது ரஷ்யாவுக்கு ஒன்றும் கஷ்டமான விடயமாக இருக்காது. ஏனெனில் விக்டர் ஜனுகோவிச் கடந்த வருடம் ரஷ்யாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைக் கைவிட்டாலே போதுமானது. அந்த உடன்படிக்கையின் ஊடாக உக்ரேனுக்குக் கிடைக்கவிருந்த அனைத்து பொருளாதார உதவிகளும் ஸ்தம்பிதம் அடைந்து விடும்.

மறுபுறத்தில் விக்டர் ஜனுகோவிச்சை ஆட்சிப் பீடத்தில் இருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகளுக்கு உதவி செய்த மேற்குலக நாடுகள் இடைக்கால அரசுக்கு நிதியுதவி வழங்குவதில் பின்னடிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்கு எரிவாயுவை விநியோகிப்பதன் மூலம் ரஷ்யா பெருமளவு வருமானத்தைச் சம்பாதித்து வருகின்றது. எரிவாயு விநியோகக் குழாய் உக்ரேன் ஊடாகவே ஐரோப்பா நோக்கி நீள்கிறது. உக்ரேனின் பல்வகை இனக்குழும கட்டமைப்புக்குள் எந்தவொரு படைப்பல பிரயோகமும் இனங்களுக்கு இடையிலான சிவில் போருக்கே வழிவகுக்கவே செய்யும். இது சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்ற பல நாடுகளைப் போன்று உக்ரேனையும் கிழக்கு - மேற்கு என்ற ரீதியில் இரண்டாகப் பிளவு படுத்திவிடும். இவ்வாறு நடக்குமானால் எரிவாயுக் விநியோகக் குழாயை இழக்கும் அபாயத்தை ரஷ்யா எதிர்கொள்ள வேண்டிவரும். எனவே உக்ரேனை ஐரோப்பாவுக்கு ஒருபோதும் ரஷ்யாவால் விட்டுக் கொடுக்கமுடியாது.

அதேவேளை உக்ரேன் மீது போர் தொடுத்தால் அது மேற்குலகின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வழிவகுத்துவிடும். சேலையும் கிழி யாமல், முள்ளும் குத்தாமல் மிகக்கவனமாகச் செயற்படவேண்டிய நிலையில் ரஷ்யா உள்ளது. எனவேதான் ஒரு எச்சரிக்கை விடுக்கும் வகையில் ரஷ்யா படைநடவடிக்கை எடுக்கப்போவது போல பூச்சாண்டி காட்டியுள்ளது. இந்தப் பூச்சாண்டிக்கு பயந்து உக்ரேன் ரஷ்யாவின் பாதம் பணியுமா? இல்லையேல் ரஷ்யாவை உதறிவிட்டு ஐரோப்பாவின் செல்லப்பிள்ளையாக மாறிவிடுமா என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும்.

அழகான தோற்றத்துடன் என்றும் உங்களை வெளிக்காட்டுங்கள்




Facia ... (Marine Collagen) ... (Grape Seed Extract) ... CMPS ... TGA ... (WHO - GMP) ... Facia

TGA பதிவிலக்கம்: 6759




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிராகரிக்கப்படும் ஆலோசனைகள்

**ஆசாத்**

"சர்வதேசப் பொலிஸாரை, படையினரை விட எமது பொலிஸ் அதிகாரிகளிடமும் புத்திஜீவிகளிடமும் சுயமான திறமை உண்டு. நல்லாட்சி செய்யும் திறமை எம்மிடம் உள்ளது. எனவே நல்லாட்சி தொடர்பில் எமக்கு எவரும் பாடம் சொல்லித் தர தேவையில்லை. நல்லாட்சியை ஏற்படுத்தவதற்கான உதவிகளையோ அல்லது வழிகாட்டல்களையோ நாம் எந்த நாட்டிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை"

இது இலங்கையின் மிகவும் சக்தி வாய்ந்த மனிதராகக் கருதப்படும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தேசத்தின் மகுடம் கண்காட்சியில் கலந்து கொண்ட போது ஊடக்வியலாளர்களிடம் தெரிவித்த கருத்து.




விடுதலைப்புலிகளுடனான போரை வெல்ல 22 வெளிநாடுகளின் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொண்ட இதே பாதுகாப்புச் செயலர்தான், இப்போது போரை வென்ற பின்பு தங்கள் பாணியிலான நல்லாட்சியை நடத்த வெளியார் உதவி தேவையில்லை எனச் சவால் விடுகின்றார்.

இது அப்படியொன்றும் அதிசயமல்ல.

பாதுகாப்புச் செயலாளரின் நேர்காணல்கள், அறிக்கைகளில் எப்போதுமே ஒரு சண்டித்தனம் மேலோங்கி நிற்கும். ஏனெனில் அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி. எனவே சண்டித்தனப் பாணியிலான இராணுவ சர்வதிகார நல்லாட்சியை நடத்த வெளிநாட்டவரின் ஆலோசனைகள் நிச்சயம் இடையூறாகத் தான் அமையும். எனவே தான் அவற்றை அவர் ஆவேசமாக நிராகரிக்கிறார்.

அவரின் நல்லாட்சிக்குப் படை அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும் அதிகாரம் பொருந்தியோருக்கு துதிபாடி அவர்களை நியாயப்படுத்த மூளைகளைப் போட்டுடைக்கும் புத்திஜீவிகளுமே போதுமானவர்கள்.

இந்தியாவின் மும்பைத் துறைமுகத்தில் ஏற்பட்ட ஒரு நீர்மூழ்கி விபத்துக்கு தானே தார்மீகப் பொறுப்பேற்று இந்தியக் கடற்படைத் தளபதி பி.சி. ஜோசி தனது பதவியை ராஜினாமாச் செய்தார். அது ஒரு மதிக்கத்தக்க ஜனநாயகப் பண்பு.

கொழும்பு வடக்கின் பிரதி பொலிஸ் மா அதிபர் ஒரு கோடீஸ்வர வர்த்தகரைச் கொலை செய்த குற்றச்சாட்டில் பதவி விலக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இன்னொரு பொலிஸ் இன்ஸ்பெக்டரும், அவரது மனைவியும் வீட்டில் போதைப் பொருள்வைத்திருந்த குற்றத்துக்காக கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளிலும் மனித உரிமைகள் ஆணையகத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகளிலும் பெரும்பாலானவை பொலிஸார் சம்பந்தப்பட்டவையே. ஒரு பிரதிபொலிஸ் மா அதிபர் உட்பட பல பொலிஸ் அதிகாரிகள் பாரதூரமான சமூக விரோத செயல்கள் தொடர் பாகக் கைது செய்யப்பட்ட போதும் அதற்கான தார்மீக பொறுப்பை ஏற்று பொலிஸ் மா அதிபர் இதுவரை தனது பதவியை ராஜினாமா செய்ய வில்லை.

கோத்தபாய ராஜபக் ஷவின் நல்லாட்சிக்கு இப்படியான பொலிஸ் அதிகாரிகள் தேவை தான். இப்படியான நிலையில் வெளிநாட்டு ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?

கொழும்பில் ஒரு சூதாட்டவிடுதி சுற்றிவளைக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றன. உடனடியாகவே பாதுகாப்பு மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் ஹுலுகலவின் கட்டளையின் பேரில் சம்பந்தப்பட்ட அத்தனை பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டனர். அடுத்த பொலிஸ் குழுவின் சுற்றி வளைப்பில் மீண்டும் கைதுகள் இடம்பெற்றன.

திருகுதாளங்கள் அம்பலப்பட்ட நிலையில் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் கலைக்கப்பட்டது. அந்தச்சம்பவம் தொடர்பாகத் தார்மீகப் பொறுப்பேற்று பாதுகாப்புச் செயலாளர் தனது பதவியை ராஜினாமா செய்யவுமில்லை. லக்ஷ்மன் ஹுலுகல கைது செய்யப்படவுமில்லை.

பெருந்தொகையான போதைப் பொருள் கொண்டு வரப்பட்ட கொள்கலன்களை விடுவிக்கும்படி பிரதமரின் இணைச் செயலாளரால் கடிதமொன்று அனுப்பப்பட்டது. இதுவரை அதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று பிரதமர் தனது பதவியை ராஜினாமா செய்யவுமில்லை. இணைச் செயலாளர் கைது செய்யப்படவுமில்லை.

இதுதான் பாதுகாப்புச் செயலாளராலும் படை அதிகாரிகள் பொலிஸ் அதிகாரிகள், புத்திஜிவிகள் என்போரால் இலங்கையில் நடத்தப்படும் நல்லாட்சி. இப்படியான நல்லாட்சி நடக்கும் ஒரு நாட்டில் வெளிநாட்டு ஆலோசனைகளை எப்படி காதுகொடுத்துக் கேட்க முடியும். அது நடக்கின்ற நல்லாட்சியைக் கெடுத்துவிடாதா? மக்களின் நலனைக் கருத்தில் கொண்டேதான் பாதுகாப்புச் செயலர் வெளிநாட்டு ஆலோசனைகளைத் தட்டிக் கழிக்கிறாரேயன்றி, தங்களுடைய அதிகாரம் பறி போய் விடுமோ என்ற பயத்தில் அல்லவென்பதை அப்பாவிகள் அனைவரும் நம்பித்தான் ஆகவேண்டும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் 12 – 18, 2014
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 567 7609

# யாருக்குக் கவலை?

சில நாள்களுக்கு முன்னர் வரை நடுங்கிக் கொண்டிருந்த பேரினவாதிகள் இப்போது பட்டாசு கொளுத்தாத குறையாக ஆரவாரித்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்களைப் பீடித்திருந்த ஜெனிவாக் காய்ச்சலில் இருந்து விடுபட்டதே இந்த ஆரவாரத்துக்குக் காரணம். இந்த முறை வழக்கம்போல் அல்லாமல் மிகக் கடுமையான முறையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

அந்த எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் வழக்கத்துக்கு மாறான சில நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன. இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை அறிக்கை மூலம் கண்டுகொள்ளாமல் நேரடியாகப் பார்த்து உறுதிப்படுத்த சர்வதேச பிரதிநிதிகளின் படையெடுப்பு தொடர்ச்சியாக நிகழ்ந்தது. வந்தவர்கள் எல்லோரும் "போர்க்குற்ற விசாரணை உறுதி" என்ற சாரப்பட வார்த்தைகளை உதிர்த்துவிட்டுச் செல்ல தமிழர் தரப்பில் மகிழ்ச்சியின் ரேகைகளும் பேரினவாதிகள் பக்கத்தில் பயத்தின் அறிகுறிகளும் தென்படலாயின. போதாக்குறைக்கு இந்த முறை இலங்கைக்கு அழுத்தத்தை அதிகரிக்கும் வகையில் பொருளாதாரத் தடையை அமெரிக்கா கொண்டுவரலாம் என்றும் கதைகள் கசியவிடப் பட்டன. இந்தக் கதையைக் கேட்டதும் அரசுத் தரப்புக்கு குலைப்பன் காய்ச்சல் வந்துவிட்டது.

அவர்களின் கனவுகளில் குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்கும் காட்சிகளும் தூக்குக் கயிறும் மாறி மாறி வந்துபோயின. வரண்டுபோன வார்த்தைகளிலேயே ஜெனிவாத் தொடர்பற்றிய அரசின் அறிவிப்புகள் வந்துகொண்டிருந்தன. இந்த நிலையில்தான் எதிர்பாராத இன்ப அதிர்ச்சியாக அரசுக்கு அமெரிக்கப் பிரேரணையின் முன்வரைவு அமைந்திருக்கிறது. இது அரசு எதிர்பார்த்ததை விடவும் பன்மடங்கு மென்மைத் தன்மை கொண்டதாக உள்ளது. வழக்கம் போலவே நல்லிணக்கத்தையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசத்தை இந்தமுறை கொண்டுவரப்படவுள்ள பிரேரணை வழங்கவுள்ளது.

ஆனால் இதற்கு எதிர்மாறான மனோநிலையில் தமிழ்ச்சமூகம் இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டது. உண்மையில் இப்படி எல்லாமே குடிமூழ்கி விட்டதைப்போன்று கவலைப்பட வேண்டிய அவசியமெதுவும் இல்லை என்றே தோன்றுகின்றது. ஏனெனில் ஜெனிவாத் தொடரை நம்பியோ அல்லது சர்வதேசத்தை நம்பியோ தமிழ் மக்களின் விடிவு இருக்கவில்லை. வேண்டுமானால் எங்களுடைய விடிவை விரைவுபடுத்துவதற்கான உந்துதலை அவை கொடுக்கலாம். ஆனால் ஒருபோதுமே அடக்குமுறைக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு மேற்குலகு இதயசுத்தியோடு உதவியதாக வரலாறு இல்லை. எனவே சுயநலம் பிடித்த மேற்குலகின் ஜெனிவாக் கைகழுவுதலை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் எங்களுடைய விடிவுக்காக நாங்களே உழைக்க உயிர்ப்போடு செயற்படவேண்டும்.

# இன்னொரு கழுத்தறுப்பு

இலங்கையின் அரசியலை பூகம்பமாக ஆட்டிப்படைத்த ஜெனிவாத் தொடர் இறுதியில் புஸ்வாணமாகப் மாறிவிட்டது. உலகத் தமிழினம் தன்மீது இழைக்கப்பட்ட அத்தனை காயங்களுக்கும் ஜெனிவாக் கூட்டத்தொடர் மூலம் மருந்திடப்படும் என நம்பியிருந்தது. ஆனால், உலக நாடுகளின் இராஜதந்திர பூகோள நலன்சார்ந்த அணுகுமுறைக்குள் சிக்கி தமிழ் மக்களின் நம்பிக்கை சிதைந்துவிட்டது.

கீறிப் பிளக்கப்பட்டு குருதி கொப்பளித்துப் பாயும் காயத்துக்கு மருந்திடுவதை சர்வதேசத்தவர்கள் மறந்துவிட்டார்கள். மாறாகக் காயத்தின் வலிகளை அறிக்கையிட்டு காயப்பட்டவனுக்கு காயத்தின் தன்மையை மீள்ஞாபகப் படுத்தி மேலும் மேலும் வலிகளை அதிகரிக்கச் செய்ததுதான் ஜெனிவாத் தொடரில் நடந்திருக்கிறது.

ஜெனிவாத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே அதுபற்றிய மிகைப் படுத்தப்பட்ட பரப்புரை போர் முழு அளவில் தொடங்கப்பட்டுவிட்டது. இந்தப் பரப்புரைப் போரின் உத்வேகத்தால் எந்தவித நிபந்தனைகளும் இன்றி சர்வதேச விசாரணைக்கூண்டில் இலங்கையை நிறுத்த முடியும் என்ற அளவுக்கு மீறிய கற்பனை வாதம் தமிழ் மக்களின் மத்தியில் விதைக்கப்பட்டது.

இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் போர்க்குற்ற விசாரணை கொண்டுவரப்படவுள்ளது என்ற நம்பிக்கை அதீதமாக முளைகொள்ளத் தொடங்கியது. தமிழ்த் தேசிய வாதிகள் எனக் கூறிக் கொள்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த அளவுக்கு மீறிய கற்பனை வாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு ஏதோ ஒன்று நடக்கப்போகின்றது என்ற மாயையை தமிழ் மக்கள் மத்தியில் அதிகமாக உண்டாக்கியிருந்தது.





வன்னிப்போர் அரங்குகளில் நடந்த அனைத்து விதமான படுகொலைகளும் எந்த வித ஒளிவுமறைவுமின்றி 'சனல் 4' உள்ளிட்ட ஊடகங்கள் மூலம் அதிகமாக வெளிப்படுத்தப் பட்டன. ஜெனிவாத் தொடர் தொடங்கினால் புதிதாக ஒரு போர்க்குற்ற வீடியோ வரும் என்ற எதிர்பார்ப்பை இந்த ஊடகங்கள் உலகத் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் தவறவில்லை. மோதல் தவிர்ப்பு வலயங்கள் மீதான தாக்குதல்கள், மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள், ஆடைகள் களையப்பட்ட நிலையிலிருந்த பெண்களின் சடலங்கள், பாலகனான பாலச்சந்திரனின் படுகொலை தொடர்பான வீடியோ, விடுதலைப் புலிகளின் தளபதி ரமேஷ் பிடித்துச்செல்லப்பட்டு விசாரணையின் பின் சுட்டுக்கொல்லப்பட்டகாட்சி, இசைப்பிரியா கைதுசெய்யப்பட்டு ஆடைகள் களையப்பட்ட நிலையில் உயிரிழந்த ஒளிப்படப் பதிவுகள் என்பவையே கடந்த காலத்தில் ஊடகங்களின் தலைப்புச் செய்திகளையும், கோப்புக்காணொலிப் பதிவுகளையும் அதிகமாக அலங்கரித்தன.



இத்தகைய கொடூரமான மனிதப் படுகொலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அடங்கிய காணொலித் தொகுப்பை மட்டும் வைத்துக்கொண்டு இலங்கையைக் குற்ற வாளிக் கூண்டில் நிறுத்தலாம் எனும் தோற் றப்பாட்டை ஊடகங்களும் தமிழ்மக்கள் மத்தி யில் விதைத்திருந்தன. உலகத் தலைவர்கள் பலரும் இந்த விடியோக் காட்சிகளைப் பார்த்து கண்ணீர் வடித்து தம்மை உத்தமர்களாகக் காட்டிக்கொள்ள முயன்றனர்.

## உலகத் தலைவர்களின் பரப்புரை

ஜெனிவாக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் முன்னரே தம்மை உத்தமர்களாகக் காட்டிக் கொள்ளப் பலர் முண்டியடித்தனர். அதிலும் இறுதிப்போரின் போது இலங்கை அரசுக்கு முண்டுகொடுத்த நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் "இலங்கை அரசைக் குற்ற வாளிக் கூண்டில் ஏற்றுவோம்" என்ற முழக்கங்களோடு இலங்கைக்குப் படையெடுக் கத் தொடங்கினர். வந்தவர்கள் எல்லோரும் அவலப்பட்ட மக்களைச் சந்தித்து குறிப்பெடுத் துச்செல்லத் தவறவில்லை. ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை, பிரிட்டன் பிரதமர் டேவிற் கமரூன், அமெரிக்கா வின் போர்க்குற்ற விசாரணைகள் பற்றி ஆராயும் அதிகாரி ஸ்ரீபன் ரொப் உட்பட பல தலை வர்களின் பயணங்கள் ஓய்வு ஒழிச்சலின்றி நடந்துமுடிந்தன.

> **உலகம் தனது இராஜதந்திர அரசியலை நடத்த அதிகம் பயன்படுத்துவது கூட்டமைப்பைத்தான் என்பது மறுக்க முடியாத உண்மை. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அடிக்கடி தமது செயற்பாடுகள் மூலம் இதனை நிரூபித்து வருகின்றனர். குறிப்பாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற போர்வையில் ஜெனிவா சென்று திரும்பிய சுமந்திரன் இலங்கையின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அத்தோடு வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனை அழைத்துக்கொண்டு சென்ற சுமந்திரன் அவரை சர்வதேசப் பிரதிநிதிகள் முன்னிலையில் வாயைத் திறக்கக்கூடாது என்று எச்சரிக்கையும் செய்துள்ளார்.**

போரால் பாதிப்புற்றிருந்த தமிழ் மக்களும் இவர்களிடம் சொன்னால் ஜெனிவாவில் தமக்கு ஏதாவது நீதிகிடைக்கும் என்று நம்பினர். தமது கண்ணீர் சுமந்த சோகக் கதைகளைக் கொட்டித்தள்ளினர். தமது பிள்ளைகளைக் கவர்ந்து சென்றவர்களையும் தமக்கு இழைக்கப்பட்ட அத்தனை அநீதிகளை யும் ஒன்றுவிடாமல் சொல்ல முன்வந்தனர். இந்தக் கண்ணீர்க்கதைகளை வந்தவர்களும் அவசரத் தனத்தோடு உள்வாங்கினர். பின்னர் உரிமை கேட்டுப் போராடிய இனமொன்றுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்துக்கான தீர்வினை வழங்காமல் வெறும் குறிப்புகளை மாத்திரம் எடுத்துவிட்டு மடிப்புக்குலையாத அதே ஆடை களுடன் பறந்தனர் அந்த மீட்பர்கள். போதாக் குறைக்கு இலங்கையை விட்டு வெளியேறும் தருணங்களில் அறிக்கைகள் மூலம் இலங்கை அரசை மிரட்டவும் இவர்கள் தயங்கவில்லை. பிரிட்டன் பிரதமர் டேவிற் கமரூன் "இலங்கை சுயாதீன விசாரணையில் இருந்து தப்பமுடியாது. ஜெனிவாத் தொடருக்கு முன் நீதியான சர்வதேச தலையீட்டுடனான உள்ளக விசாரணை ஒன்றை வெளியிட்டு அதன் முடிவுகளை இலங்கை பகிரங்கப் படுத்தத் தவறின் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்படும்" என முழங்கிச் சென்றார்.

ஆனாலும் இலங்கையின் இனப்பிரச் சினைத் தீர்வுபற்றி இந்த உலகத்தலைவர்கள் வாயே திறக்கவில்லை. ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை உள்ளதை உள்ளவாறு அறிக் கையிட்டதால் அவரைப் பின்தொடர்ந்து வந்த வர்கள் அதை வைத்து இலங்கையை மிரட்டினர். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கிமூனும் "இறுதிப்போர்க் காலத்தில் தவறு இழைத்துவிட்டோம். இதற்குப் பரிகாரம் தேட முற்படுகின்றோம்" என்று இந்த ஜெனிவா பற்றிய கற்பனை வாதத்துக்கு அதிகம் வலுச் சேர்த்தார். இவ்வாறு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் தொடங்கி அவற்றின் தோழமை நாடுகள் வரை எல்லோரின் வாதங்களும் "தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவோம்" என்பதாகவே இருந்தன. இதனாலோ என்னவோ ஜெனிவா மூலம் ஏதோ ஒரு விடிவு கிடைக்கும் என்ற ஒளிக்கீற்று தமிழர்கள் மத்தியில் தென்பட்டது.

இதன் வெளிப்பாடாகவே அரசால் அமைக் கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னி லையில் தமது உறவுகளுக்கு நடந்த அத்தனை அநீதிகளையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தனர். உயிரே போனாலும் உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்ற வெறியும் ஜெனிவா மூலமாகத் தீர்வு கிடைக்கும் என்ற ஏக்கமுமே இவ்வாறு அப்பாவிகளின் வாய்களைத் திறக்க வைத்தது. ஆனால் அதற்கு எதிர்மாறாக தமிழர்கள் மீண்டுமொருமுறை சர்வதேசத்தால் நம்பவைக்கப்பட்டு ஜெனிவாவில் கழுத்தறுக்கப் பட்டுவிட்டனர்.

எந்த ஒரு நாடும் ஏதோ ஒரு நாட்டின் அரசியலில் தலையீடு செய்கின்றது என்றால் குறித்த நாட்டுக்கு தலையீடு செய்யும் நாட்டில் ஏதோ ஒரு தேவைப்பாடு இருக்கின்றது என்பதுதான் யதார்த்தம். உலக இராஜதந்திர அரசியலில் பாவபுண்ணியங்கள் என்ற ஒழுக்கப் பெறுமானங்களுக்கு அப்பால் இராஜதந்திர நலன்களே எப்போதும் முன்னிலைப்படுத்தப்படு கின்றன.

அந்த வகையில் இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருக்கும் இலங்கையின் கேந்திர அமைவிடம் பூகோளவியல் அடிப்படையிலும் சர்வதேச அரசியல் அடிப்படையிலும் முக்கிய மானது. இலங்கையை எவர் தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கிறாரோ அந்த நாடே இந்து சமுத்திரத்தின் தனிக்காட்டு ராஜாவாக உலாவரமுடியும். அதனால்தான் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை தமது பக்கம் வளைப்பதற்கு முயற்சித்து வருகின்றன. எனவேதான் இனப்பிரச்சினை, போர்க்குற்றம் போன்ற விடயங்களை தங்களு டைய வசதிக்கேற்றாற் போன்று கையாண்டு வருகின்றன. உண்மையில் அந்த நாடுகள் தங்களுடைய நலனைத்தான் முதன்மைப்படுத்த நினைக்கின்றனவே தவிர ஒருபோதும் தமிழர் களுடைய பிரச்சினைக்கு விடிவைப் பெற்றுத் தரவேண்டும் என்று எண்ணுவதில்லை.

## கூட்டமைப்பின் கூத்து

உலகம் தனது இராஜதந்திர அரசியலை நடத்த அதிகம் பயன்படுத்துவது கூட்டமைப்பைத் தான் என்பது மறுக்க முடியாத உண்மை. கூட் டமைப்பின் தலைவர் சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அடிக்கடி தமது செயற் பாடுகள் மூலம் இதனை நிரூபித்து வருகின்ற னர். குறிப்பாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற போர்வையில் ஜெனிவா சென்று திரும்பிய சுமந்திரன் இலங்கையின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற் றஞ்சாட்டப்படுகின்றது. அத்தோடு வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனை அழைத் துக்கொண்டு சென்ற சுமந்திரன் அவரை சர்வதேசப் பிரதிநிதிகள் முன்னிலையில் வாயைத் திறக்கக்கூடாது என்று எச்சரிக்கையும் செய்துள்ளார்.

"நீங்கள் எழிலன் என்ற விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரின் மனைவி. எனவே நீங்கள் ஏதாவது சொன்னால் அதனை தமிழ் மக்களின் குரலாகப் பார்க்காமல் புலிகளின் குரலாகவே சர்வதேசப் பிரதிநிதிகள் எண்ணிவிடுவார்கள்." என்ற காரணத்தைச் சொல்லியே அனந்தியின் வாயைச் சுமந்திரன் அடைத்தார் என்று கூறப்படுகிறது. அவருடைய கருதுகோள் ஒருவகையில் சரியாக இருந்தாலும் இன்னொரு கேள்வியும் எழுவே செய்கிறது. அதாவது அனந்தியை ஜெனிவாவுக்கு அழைத்துச் சென்ற பின்னர்தான் அவர் விடு தலைப் புலி உறுப்பினரின் மனைவி என்ற ஞானம் சுமந்திரனுக்குப் பிறந்ததா? அவருக்கு முதலே அனந்தி விடுதலைப்புலி உறுப்பினரின் மனைவி என்பது தெரிந்திருந்தால் எதற்கு வீணாக சுவிஸுக்கு அழைத்துச் சென்றார்? உண்மை யில் சுமந்திரன் மிகத் தந்திரமாக காய்களை

> ***தமிழர்களுக்கு வாலையும் அரசுக்குத் தலையையும் காட்டித் தன்னுடைய விலாங்குத் தனத்தை இன்னொரு முறை சுமந்திரன் நிரூபித்திருக்கிறார்.***

நகர்த்தியிருக்கிறார். அனந்தியை சுவிஸுக்கு அழைத்துச் சென்றதன் மூலம் போர்க்குற்ற விசாரணை தொடர்பான நெருக்கடியை கூட்ட மைப்பு ஜெனிவாவில் கொடுக்கப் போகிறது என்று தமிழ் மக்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பை உண்டாக்கினார். ஆனால் அங்கு சென்று அனந்தியின் வாயைப் பூட்டியதன் மூலம் இலங்கை அரசினதும் சர்வதேச நாடுகளினதும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்துவிட்டார்.நாடாளுமன்ற மைதா னத்தில் ஆளுந்தரப்புடன் கிரிக்கெட் விளையாடிய பெருந்தன்மையான உறுப்பினரை சம்பந்தன் ஏன் ஜெனிவாவுக்கு அனுப்பினார் என்பதும் இங்கு ஆராயப்படவேண்டியதே. தமிழர்களுக்கு வாலையும் அரசுக்குத் தலையையும் காட்டித் தன்னுடைய விலாங்குத் தனத்தை இன்னொரு முறை சுமந்திரன் நிரூபித்திருக்கிறார்.

"சுமந்திரனுக்கு எந்த வகையிலும் நழுவல் போக்கில் நானும் சளைத்தவன் இல்லை" என்று இன்னொரு புறத்தில் வடமாகண முதல்வரும் திறமை காட்டியிருக்கிறார். இலங் கையை சர்வதேச விசாரணைக்கூண்டில் நிறுத்த வேண்டும் என்ற "பில்டப்பை" தேர்தல் மேடைகளில் மட்டும் வெளுத்துவாங்கிய விக்னேஸ்வரன் பின்னர் மெல்ல மெல்ல தன்னுடைய சுருதியை குறைக்கத் தொடங் கினார்.

"நான் அரசியல்வாதியல்ல நிர்வாகி மட்டுமே"

"இலங்கையில் நடைபெற்றது இனப்படு கொலை என்று சொன்னால் சட்டச் சிக்கல். வேண்டுமானால் இனப்படுகொலையைப் போன்றது என்று சொல்லலாம்."

"எங்களுக்கு இப்போது தேவை அபி விருத்தியே. அரசியலை அரசியல் ரீதியில் பார்க்க வேண்டும் இப்போது அபிவிருத்தியைப் பார்க்க வேண்டும்" என்று முதலமைச்சர் விடுகின்ற வார்த்தைகளைக் கேட்கின்ற போது அவர் தமிழினத்தின் பிரதிநிதியா அல்லது அரசின் பிரதிநிதியா என்ற சந்தேகம் ஏற்படத் தவறுவதில்லை. அவரைக் குறைசொல்லிப் பயனில்லை. கஷ்டப்பட்டுப் பிடித்த கதிரையைப் பாதுகாக்க வேண்டுமல்லவா. அதற்கு இப் படித்தான் சொல்ல வேண்டும்.

எனவே மொத்தத்தில் கூட்டமைப்பின் சார்பாக ஜெனிவா சென்ற சிலரின் செயற்பாடு களையும் சர்வதேச இராஜதந்திர அரசியலை யும், தமிழ்த் தேசியம் கூறி உசுப்பேற்றுபவர் களின் உள்நோக்கங்களையும் அறியாமல் தமிழர்கள் மீண்டுமொருமுறை ஜெனிவா என்ற எட்டாக் கனியை வைத்துக் கொட்டாவி விட்டி ருக்கிறார்கள். எங்களை நம்பினால் நடுத் தெருவில் தான் விடப்படுவீர்கள் என்பதை சர்வதேசம் தமிழ் மக்களுக்கு மீண்டும் போட்டுடைத்திருக்கிறது.

சர்வதேசத்தை நம்பியதால்தான் எங் களுடைய விடுதலைப் போராட்டமும் முள்ளி வாய்கால் அவலத்தை சந்திக்க நேர்ந்தது. புலிகள் தங்களுடைய பலத்திலும் மக்களுடைய ஆதரவிலும் தங்கியிருந்தபோது வெற்றிமேல் வெற்றியாக வந்து சேர்ந்தன. முல்லைத் தீவு தொடக்கம் ஆனையிறவு வரையான வரலாற்று வெற்றிகள் சாத்தியமாகின. தரை கடல்,வான் என்று முப்படைகளையும் கட்டமைக்க முடிந்தது. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் சர்வதேச நீரோட்டத்தில் கரைந்து அந்த நாடுகளின் சொற்படி சில நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியபோதே புலிகளின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தென்பட்டன. அதன் பின்னரும் கடைசி வரையும் "அமெ ரிக்கா வந்து காப்பாற்றும்" என்ற சர்வதேசத்தை நம்பிய போக்குத்தான் முள்ளிவாய்க்கால் அவலத்தை எல்லோருக்கும் பரிசாகத் தந்தது.

முள்ளிவாய்க்காலோடாவது சர்வதே சத்தை நம்பிக்கெடுதல் என்ற போக்கில் இருந்து தமிழினம் விடுபட்டிருக்க வேண்டும். எத்தனையோ முறை சூடுபட்டுவிட்டோம். கடை சிச்சூடு இப்போது ஜெனிவாவில் விழுந் திருக்கிறது. சூடு சுரணையற்ற தமிழர்களுக்கு இன்னும் நிறையச் சூடுபட்டாலும் புத்திவரப் போவதே இல்லை.

**அனுஷ்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய விமான மாயம் என்ன?

மலேசியாவில் இருந்து சீனா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் விமானம் கடந்த 7 ஆம் திகதி இலங்கை நேரப்படி இரவு 11.10 மணியளவில் திடீரெனக் காணாமல் போய்விட்டது.


வழமையாகவே விமானத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டாலோ அல்லது அசம்பாவிதம் நிகழ்ந்தாலோ உடனடியாகவே விமானிகள் அது குறித்த தகவலை கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பிவிடுவார்கள். இதனால் விமானத்துக்கு ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்திருந்தால் அது எங்கு நடந்தது என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்து மீட்புப் படையணியை அனுப்ப முடியும். ஆனால் இந்த முறை அப்படி எந்த ஒரு தகவலும் வராமலே விமானத்துடனான தொடர்புகள் திடீரெனத் துண்டிக்கப்பட்டு விட்டன. இந்த விமானம் வியட்நாம் கடற்பகுதிக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த போதே அது காணாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது.

## திட்டமிட்ட சதியா?

மலேசிய எயார் லைன்ஸ் விமானத்தில் 297 பயணிகள் இருந்துள்ளனர். இந்தப் பயணிகளின் பட்டியலை மலேசிய அரசு வெளியிட்டபோதுதான் திடுக்கிடும் உண்மை வெளியானது. இந்த விமானத்தில் பயணித்தவர்களின் நான்கு பேர் போலியான விபரங்களைக் கொடுத்து ஏற்கனவே திருடப்பட்ட கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி பயணித்திருக்கிறார்கள். அந்தக் கடவுச்சீட்டுக்களைப் பறிகொடுத்தவர்கள் தங்களுடைய பெயரும் பயணிகள் பட்டியலில் இருப்பதைக் கண்டு விபரத்தைச் சொன்ன பின்னர்தான் நான்கு பேரின் மோசடிகளும் வெளிவந்துள் ளன. குறித்த நால்வரும் திட்டமிட்டு விமானத்தைக் கடத்திச் சென்று மூழ்கடித்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதேவேளை வியட்நாம் அருகே உள்ள தோ சூ தீவுக்கு தென்மேற்கு பகுதியில் விமானம் ஒன்றின் வால் பகுதி மற்றும் கதவு பகுதிகள் உடைந்து கிடந்ததை அந்த நாட்டு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அது, காணாமல் போன மலேசிய விமானத்தின் பாகங்களாக இருக் கலாம் என நம்பப்படுகிறது. இன்னும் சில நாள்களில்தான் மலேசிய விமானத்துக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியவரும்.





## இன்னும் இயங்கும் செல்போன்

காணாமல் போன விமானத்தில் பயணம் செய்த ஒரு சீனப் பயணியின் செல்போன் இன்னும் பயன்பாட்டில் உள்ளதாக அவரது உறவினர்கள் புதிய தகவலை வெளியிட்டுள்ளனர்.

அவரது செல்போன் நம்பரை தொடர்பு கொண்டபோது, மணி ஒலித்துக்கொண்டே இருப்பதாகவும், ஆனால் யாரும் அதை எடுத்து பேசவில்லை என்றும் தெரிவித்தனர்.

எனவே செல்போன் சமிஞ்ஞையைப் பயன்படுத்தி விமானத்தை கண்டுபிடிக்குமாறு பயணியின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர். விரைவில் அந்தச் செல்போனை மீட்பதன் மூலம் மலேசிய விமானம் மாயமானதன் உண்மைகள் புலப்படக்கூடும்.



**இப்போது உலகெங்கும் பரபரப்பாகப் பேசப்படும் விடயம் வியட்நாம் கடற்பகுதிக்கு மேலாக பறந்துகொண்டிருந்தபோது மாயமாகத் தொலைந்துபோன மலேசிய விமானத்தைப் பற்றித்தான். ஏனெனில் இந்த விமானம் விபத்துக்குள்ளா[illegible] நாள்கள் கடந்த போதும் இன்னும் அதுபற்றிய தெளிவான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அந்த விமானத்தின் வால்பகுதி கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டபோதும் எஞ்சிய பாகங்கள் எதுவும் கிடைக்கவில்லை.**

**இதற்கு முன்னரும் இவ்வாறு விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்க முடியாமல் போன ஒன்பது சம்பவங்கள் பதிவாகியுள்ளன.**

♦ 1938 ஜூலை 28 ஆம் திகதியன்று ஹவாயன் கிளிப்பர் என்ற பறக்கும் படகு பிலிப்பைன்ஸில் இருந்து புறப்பட்டு பசுபிக் கடலுக்கு மேலாக சென்று கொண்டிருந்த போது காணாமல் போனது.

தற்போது காணாமல் போயுள்ள மலேசிய விமானம் போன்றே கடுமையான எரிபொருள் பிரதேசத்தில் இந்த விமானம் காணாமல் போனது. இந்தநிலையில் 1938 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று இந்த விமானத்தை தேடும் பணிகள் கைவிடப்பட்டன.

♦ 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியன்று ஹனிபல் என்ற விமானம் 4 பயணிகளுடனும் 4 பணியாளர்களுடனும் காணாமல் போனது. பாகிஸ்தானில் இருந்து சார்ஜாவுக்கு செல்லும் வழியில் இது காணாமல் போனது.

1940 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதியன்று இந்த விமானத்தை தேடும் பணிகள் கைவிடப்பட்டன. இந்த விமானத்தில் உயர் இராணுவ அதிகாரிகள் பயணம் செய்திருந்தனர்.

♦ 1946 மார்ச் 23 ஆம் திகதியன்று இல் பிரிட்டனின் ஜி ஏஜிஎல்எக்ஸ் என்ற விமானம் 5 பயணிகளுடன் 5 பணியாளர்களுடனும் காணாமல் போனது. கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் கொக்கோஸ் தீவுகளை நோக்கி சென்ற போதே காணாமல் போனது.

♦ 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதியன்று பிரிட்டன் ஸ்ரார் ரைகர்ஸ் விமானம் 25 பயணிகளுடனும் 6 பணியாளர்களுடனும் காணாமல் போனது. போர்த்துக்கல்லில் இருந்து பேர்முடாவுக்கு செல்லும் வழியில் இந்த விமானம் காணாமல் போனது.

♦ 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதியன்று டிசி-3 என்ற விமானம் 29 பயணிகளுடனும் 3 பணியாளர்களுடனும் காணாமல் போனது. பியார்டோ ரிக்கோ விமான நிலையத்தில் இருந்து மியாமி விமான நிலையத்துக்கு செல்லும் போது இது காணாமல் போனது. எனினும் அதன் பாகங்களையும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

♦ 1949 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதியன்று ஸ்டார் ஏரியல் என்ற பிரிட்டன் - தென் அமெரிக்க கூட்டுநிறுவனத்தின் விமானம் காணாமல் போனது. இதில் 13 பயணிகளும் 7 பணியாளர்களும் இருந்தனர். இது பேர்முடாவில் இருந்து ஜமேக்காவுக்கு செல்லும் வழியில் காணாமல் போனது.

♦ 1951 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதியன்று டிசி-4 கனேடிய பசுபிக் விமானம் காணாமல் போனது. இதன்போது 31 பயணிகளும் 6 பணியாளர்களும் அதில் இருந்தனர்.

♦ 1960 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதியன்று டிசி-3 கல்ப் விமானம் ஒன்று காணாமல் போனது. 13 பயணிகளும் 3 பணியாளர்களும் அதில் இருந்தனர். டோஹாவில் இருந்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்லும் போது இந்த விமானம் காணாமல் போனது.


♦ 1995 ஆம் ஆண்டு மேர்படி நுசன்டிரா 6715 என்ற விமானம் காணாமல் போனது. 10 பயணிகள் 4 பணியாளர்கள் அதில் இருந்தனர். பிமா விமான நிலையத்தில் இருந்து இந்தோனேசியா செல்லும் போதே இது காணாமல் போனது. இறுதிவரை அதன் சிதைவுகளையும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

இந்தப் பட்டியலில் மலேசிய விமானமும் சேர்ந்துவிடுமா? இல்லையா? என்பது இன்னும் சிலநாள்களில் தெரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமுகன்

# நீதியின் பிள்ளை




நீதி நியாயத்துக்கான போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஒரு சமூகத்தின் உண்மைகள் மறைக்கப்பட்டாலும் உரிமைகள் மறுக்கப்பட்டாலும் எங்கோ ஒரு மூலையில் இருந்து எதிர்க் குரல் எழுப்பப்படுவது தவிர்க்கமுடியாதது. வரலாற்றின் ஓரமாகவேனும் அந்தக் குரல் காலத்துக்கு காலம் ஒலித்துக்கொண்டே இருந்திருக்கிறது. அதனால்தான் இன்றுவரை உண்மை உயிர்வாழ்கிறது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவிப்பிள்ளையின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடையும் நிலையில் அவர் தனது கடைசி ஆண்டறிக்கையை சமர்ப்பித்து சபையின் 25ஆவது அமர்வில் உரையாற்றியிருக்கிறார்.

“என்னைப் பொறுத்தவரை எனது பதவிக்காலத்தில் நான் உண்மையான காத்திரமான திருப்தியளிக்கக்கூடிய பணியைச் செய்திருக்கிறேன். உலகத்தின் இயங்கு சக்தியான நான்கு தூண்களில் மனித உரிமையையும் இணைத்து வெற்றிகண்டிருப்பது குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய விடயம். அதாவது அபிவிருத்தி, அமைதி மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுடன் மனித உரிமை என்ற விடயத்தை நான்காவது தூணாக பரிணமிக்கச் செய்திருப்பது மனநிறைவைத்தருகிறது” என்று நவிப்பிள்ளை தனது இறுதி உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தனது பதவிக்காலத்தில் தான் திருப்திகரமான பணியை முடித்திருப்பதை வலியுறுத்தும் அதே சமயம் உலக அளவில் மனித உரிமைகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் அகலவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் பின்னரான நிலைமைகளை நேரடியாக அவதானித்தவர் என்ற வகையில் நவிப்பிள்ளை தனது அறிக்கையில் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் முக்கியமான கருத்தொன்றை முன்வைத்திருக்கிறார்.

“உள்நாட்டுப் பொறிமுறை தோல்வியடைந்து விட்ட நிலையில் ஐ.நா.சபை தனது சொந்த - சர்வதேச - விசாரணைப் பொறிமுறையை இலங்கையில் நிறுவுவதே உறுதியான பங்களிப்பைத் தரும் என நான் பரிந்துரைக்கிறேன்”என்ற அவரது அறிவிப்பு புதிய திருப்பமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்கா போர்க்குற்ற விசாரணையை சர்வதேச மட்டத்தில் இந்த முறை கோரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்தப் பிரேரணையின் முன்நகல் கசிந்ததை அடுத்து இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெரும் ஏமாற்ற நிலை ஏற்பட்டிருந்தது. அத்தகைய நிலையில் சற்று ஆறுதலாக அமைந்துள்ளது நவநீதம் பிள்ளை அம்மையாரின் இந்த அறிவிப்பு. இதன் மூலம் பாவப்பட்ட தங்கள் வாழ்வில் சிறிய மாற்றங்களேனும் நிகழலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

எது எப்படியிருந்தாலும் அம்மையார் தனது பதவியிலிருந்து விடைபெறுவதற்கான காலம் வந்துவிட்டது. அவரது இறுதி அறிவிப்பு இலங்கை தமிழர்களுக்கு சாதகமாக அமைந்தாலும் அதை பொதுத்தன்மையோடு கொண்டு நடத்துவதற்கான எதிர்கால நகர்வுகள் எப்படி அமையும் என்பதை இப்போது கூறிவிடமுடியாது.

போர்க்குற்றம் தொடர்பான விசாரணையின்போது இருதரப்பு குற்றங்களும் விசாரிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்படலாம். ஒருதரப்பு இலங்கை அரசு. மற்றத்தரப்பு விடுதலைப்புலிகள். விடுதலைப்புலிகளை முற்றாக அழித்துவிட்டோம் என இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

அப்படியெனில் இருதரப்பு விசாரணை சாத்தியமற்றதாகி விடும். போரின்போது இருதரப்பு மோதல்கள் இடம்பெற்றன. அதில் விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அதைத்தாண்டி தமிழ்மக்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். போர் நெறிமுறைகளுக்கு அப்பால் இராணுவத்தினர் மேற்கொண்ட மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகளே அதிகமாக பதிவாகியிருக்கின்றன.

தமிழ்மக்களுக்கான நியாயம் என்ற அடிப்படையில் சர்வதேச விசாரணை அமையவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களது எதிர்பார்ப்பு. உலக அரசியல் நிலைமை மாறிக்கொண்டே இருக்கிறது. இந்த ஓட்டத்தில் தமிழ்மக்களது உரிமை,மற்றும் நியாயமான கோரிக்கைகளை சர்வதேசம் புரிந்து கொண்டு நடந்துகொள்ளவேண்டும்.

வாய்ச் சவாடல்கள் அறிக்கைகள் மூலம் உசுப்பேத்தும் அரசியலை சர்வதேச அரசியல்வாதிகளும் செய்யக்கூடாது. அல்லது குறுகிய நோக்கங்களுக்காகச் செயற்படக்கூடாது. மாறாக ஒரு இனத்தின் விடுதலையில் அக்கறை கொண்டு சர்வதேசத் தலைவர்கள் செயற்படவேண்டும் என்றே தமிழ்மக்கள் விரும்புகின்றனர். எதிர்பார்க்கின்றனர்.

அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகள் தம்மை ஏமாற்றிவிட்டன என்றே தமிழ்மக்கள் கருதுகின்றனர். இந்த நிலைமை தொடரக்கூடாது. நவிப்பிள்ளையின் அறிவிப்பும் வெறும் காகித வடிவிலேயே காலம் முழுவதும் இருந்துவிடுமோ என்ற சந்தேகத்தை தமிழ்மக்கள் மனதில் உருவாக்காது நடந்துகொள்ள வேண்டியது சர்வதேசத்தின் கடமை. இந்த உண்மையே வரலாறுகளைப் புதுப்பிக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத்தொடர் - 3

படகுக்காரர்கள் பாறைகள் அபாயங்கள் இவற்றிலிருந்து பாதுகாப்பாக பயணம் செய்வதற்காக, கடலின் பல்வேறு இடங்களில் கலங்கரை விளக்கம் கட்டப்படுகிறது. சம்சாரம் என்னும் சாகரத்தில் சாயிபாபாவின் கதைகள் அத்தகைய பயனை நல்குகின்றன. அவைகள் அமிர்தத்துக்குச் சுவையூட்டுகின்றன. நமது உலகப் பாதையை மிருதுவாக கடப்பதற்கு எளியதாகவும் அமைகின்றன.

ஞானிகளின் கதைகள் ஆசீர்வாதிக்கப்பட்டவை. நமது செவிகளின் வழியாக உள்ளத்தினுள் புகும்போது சரீராபிமானம் அல்லது அஹங்காரம் துவைத உணர்ச்சி மறைகின்றது. நம் உள்ளத்தில் அவைகள் தேக்கப்படுமானால் சந்தேகம் பறந்தோடும். சரீரத்தின் பெருமை உணர்ச்சி கீழே இறங்கும். ஏராளமாக விவேகம் சேகரிக்கப்படும். பாபாவின் தூய புகழை விவரிப்பதும், அதையே அன்புடன் கேட்பதும் அடியாரின் பாவங்களை அழிக்கும். கிருத யுகத்தின் ஆன்மீகப் பயிற்சியானது சமதமா (உள்ளம், உடல் இவற்றின் தனித் தன்மை) திரேதா யுகத்துக்குத் தியாகம், துவாபர யுகத்துக்கு வழிபாடு கலியுகத்திற்கு இறைவனின் புகழையும், நாமத்தையும் இசையாகப் பாடுவதுமாகும். கடைசிப் பயிற்சியானது எல்லோர்க்கும் உரியதாகும். மற்றைய பயிற்சிகளான யோகம், யாகம், (தியாகம்) தியானம், தாரணை, (ஒருமுகப்படுத்தல்) ஆகியவை பழகுவதற்கு மிகவும் கடினமானவை. இறைவனது (சாயிபாபா) புகழைச் செவிமடுப்பது மிகவும் எளியதாகும். நாம் நமது கவனத்தை அவைகள் மீது திருப்ப மாத்திரமே வேண்டும். இவைகளைக் கேட்பதும், கதைகளைப் பாடுவதும், புலன்கள், அவற்றின் பொருள்கள் மீதுள்ள உறவை நீக்கி அடியவர்களைப் பற்றறுத்தவர்களாக்கி முடிவில் ஆன்ம உணர்வுக்கு வழியமைக்கும் குறிக்கோளையே கருதிக்கொண்டு சாயிபாபா 'ஸத்சரித்ராமிருதா' என்னும் அவரது கதைகளை எழுதச் செய்தார். அல்லது உதவி செய்தார். அவருடைய வாழ்விலே இடம் பெற்ற பல அற்புதங்கள் இங்கே கதைகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

### சாயிபாபாவின் தாயன்பு

தன் இளங்கன்றை பசு எப்படி நேசிக்கிறது என்பதை யாவரும் அறிவர். அதன் மடி எப்போதும் நிறைந்திருக்கிறது. கன்று பால் வேண்டி மடியை முட்டும்போது தடை யின்றி பால் பெருக்கெடுக்கின்றது. அங்ஙனமே தாயாரும் தக்க தருணத்தில் தன் குழந்தையின் பசியை அறிந்து முலையமுது தந்து ஊட்டுகிறாள். குழந்தைக்கு ஆடை அழகுற அணிவிப்பதிலும் சிறப்புச் சிங்கா ரிப்பதிலும் முக்கிய கவனம் செலுத்துகிறாள். குழந்தை எதைப் பற்றியும் அறிவதுமில்லை. கவலையுறுவதுமில்லை.

ஆயின் தன் குழந்தை நன்றாக உடை உடுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கண்ணுறும் தாயின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லாதது தாயன்பு விசித்திரமனது அசாதாரணமானது பற்றில்லாதது. இணையில்லாதது. தமது அடியவர்களிடம் சத்குருவும் இத்தகைய அன்பையே சாயிபாபா என்னிடம் கொண் டிருந்தார். அதைப்பற்றிய அனுபவம் வருமாறு.


நான் அரசாங்க வேலையிலிருந்து 1916 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்றேன். கௌரவமாக என் குடும்பத்தை நடத்துவதற்கு எனக்குத் தரப்பட்ட பென்ஷன் போதவில்லை. குரு பூர்ணிமா அன்று நான் சீரடிக்குச் சென்றிருந்தேன். அங்கு அண்ணா சிஞ்சணீகர் அவராகவே பாபாவிடம் எனக்காக கீழ்வருமாறு வேண்டினார். 'தயவுசெய்து அவரை அன்புடன் நோக்குங்கள். அவர் பெறும் பென்ஷன் அறவே போதாது. அவரது குடும்பமோ வளர்ந்து வருகிறது. அவருக்கு வேறு வேலை ஏதும் கொடுங்கள். அவரை மகிழச் செய்யுங்கள். இதற்கு பாபா பதில் அளித்தார். 'அவர் வேறு வேலை பெறுபவர். ஆயின் இப்போது அவர் எனக்குப் பணி செய்து மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும். அவரது உணர்வு எப்போதும் நிறைந்திருக்கும். ஒரு போதும் காலியாக இராது. அவர் தனது கவனம் அனைத்தையும் என்பால் திருப்பி நாத்திகர்கள், மதப்பற்று அற்றவர்கள் கொடுமையாளர்கள் இவர்களின் கூட்டுறவைத் தவிர்த்து, எல்லோரிடமும் பணிவாகவும் அடக்கமாகவும் இருந்து உள்ளத்தாலும் உயிராலும் என்னை வணங்க வேண்டும். இதை அவர் செய்வாராகில் அவர் எல்லையற்ற பேரின்பத்தை அடைவார்' என்றார்.

ஒரு நாள் நண்பகல் ஆராத்தி முடிந்த பிறகு அடியார்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது பாபா கீழ் கண்ட அழகான அறிவுரையை விடுத்தார்.

'நீங்கள் எங்கு வேண்டுமானாலும் இருங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செய்வது அனைத்தும் எனக்குத் தெரியும். நானே அனைவருடைய அந்தரங்க ஆட்சியாளனாக இருதயத்தில் அமர்ந்து இருக்கின்றேன். இந்த உலகின் கண் அசையும் அசைவற்ற சர்வ ஜீவராசிகளையும்நான் அரவணைக்கின்றேன். இப்பிரபஞ்சமென்னும் தோற்றத்தை நானே கட்டுப்படுத்துபவன். ஆட்டுவிப்பவன் எல்லா வர்க்கங்களின் மூல மாதா நானே முக்குணாங்களின் கூட்டுறவும் நானே, நானே எல்லா உணர்ச்சிகளையும் உந்துபவன். படைப்பவன், காப்பவன். அழிப்பவனுமாம். என்பால் கவனத்தைத் திருப்புபவனை எதுவும் துன்பம் விளைவிக்காது. ஆனால் மாயை, என்னை மறந்தவனை ஆட்டி உலுக்கும். எல்லாப் பூச்சிகள், எறும்புகள் கண்ணுக்குத் தென்படுபவை. அசையக் கூடிய, அசைய முடியாத உலகம் எல்லாம் என்னுடைய உடம்பு அல்லது உருவம் ஆகும்.

இத்தகைய அழகான விலை மதிப்பற்ற மொழிகளைக் கேட்டு இனிமேல் என் குருவைத் தவிர வேறு யாருக்கும் நான் பணிவிடை செய்யப் போவதில்லை என்று என்மனதில் நான் தீர்மானித்தேன். அண்ணா சிஞ்சணீகரிடம் பாபா விடுத்த பதில் (உண்மையில் அது எனக்கானதாகும்) அதாவது நான் ஒரு வேலை பெறுவேன் என்றும் எண்ணம் என் மனதில் சுழன்றது. நான் நிகழ்ச்சிகளைக் கண்ணுறும்போதும் பாபாவின் வார்த்தைகள் உண்மையாயின. நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தைப் பெற்றேன். ஆனால் அது குறுகியகால அளவுடையது. பிறகு நான் சுதந்திரம் அடைந்தேன். என் குரு சாயிபாபாவினுடைய சேவைக்கு என்னைப் பூரணமாக சமர்ப்பித்தேன்.

(ஞானத்தை இன்னும் தேடுவோம்...)



சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 611

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| ■ | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | | ■ | 15 | | ■ | |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. வயது.
2. உயர்வாக ஏற்றுதல்.
3. வசமாகுமாறு செய்யும் கலை.
4. நாள் .
5. சொத்து.
6. ஓர்ஆயுதம்.
10. பஞ்சபுராணத்தில் ஒன்று.
12. இது ஓயாது.
13. நண்பன்.
14. தலைவர்.
15. இதுவும் ஓர் ஆயுதம்.
17. அம்பு.
18. எல்லாமும்.
20. மறி.
21. நவீன.

### இடமிருந்து வலம்

1. அம்பிகாபதி மனம் கவர்ந்தவள்.
4. திண்மம், திரவத்துக்கு அடுத்த நிலை.
7. வேகம்.
8. கோபம் கொள்ளல்.
9. மருத்துவம்.
11. வழங்கும்.
12. அருகிவரும்சமையலறை உபகரணம்.
14. ஓர் இனிப்புப் பண்டம்.
15. ஆற்றும் காரியம்.
16. போட்டிக்கு அழைப்பு விடுப்பது.
18. ஒளிவு மறைவாகத் திட்டமிடுவது.
19. பதற்றமடைதல்.
21. இடம்பெயர.
22. திடீரென.
23. சிலப்பதிகார நாயகன்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 611

சொற்சிலம்பம் போட்டி 611ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 02ஆம் மற்றும் ஏப்ரல் 09ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 609 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.உபவாசம், 2.சாத்திரி, 3. வதி, 4.உரை, 5. தகவல், 6. வில்லை, 8. உடு, 10. நல்ல, 13.தகனம், 14. இன்று, 16.வதம், 17.தலைவிதி, 18. கடுமை, 20.தகடு, 21.குகை, 22.பரி

**இடமிருந்து வலம்**

1.உசாவல், 4.உதவி, 7.பத்தி, 8.உரைகல், 9.வாதி, 10.நடு, 11. வலை, 12.சரிதல், 14.இல், 15.கலைவன், 18.கன, 19.தறுதலை, [illegible]

### போட்டி இல. 608 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** – G. சத்தியபாரதி, இல;-86/15, பன்வில வீதி வத்துகாமம்.

**2ஆம் பரிசு** – சி.கிஷ்ணவேள், கல்வியற் கல்லூரி பூந்தோட்டம், வவுனியா.

**3ஆம் பரிசு** – திருமதி.அ. விமலராணி, இல: 114/2, பிரதான வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) R. அருண்பிரசாத்,
இல;-04, பிரதான வீதி, கலஹா.

(2) S. செல்வநாயகம்,
குமரன் வீதி, களுவாஞ்சிக்குடி.

(3) மதன் பவிஷன்,
இல; 344/7, சந்திரா லேன், மட்டக்களப்பு.

(4) ச. நவரத்தினம்,
இல;-7 1/19 காலி வீதி, வெள்ளவத்தை.

(5) சீ.குகராஜா ,
இல;179,தாழ்வுப்படு வீதி, எழுத்தூர், மன்னார்.

(6) வஸந்தா பாலந்திரா,
இல;21, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

(7) த. சாம்பசிவம்,
இல;-(B)-4, (F) -20, புளுமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-13.

(8) ஏ.பீ.றஜப்டீன்,
இல; 73ஏ, நல்று வீதி, பாலமுனை-02.

(9) சீ. கீர்சா ,
சுழிபுரம்கிழக்கு, சுழிபுரம்.

(10) வீ. சுகந்தி,
முதலாம் வட்டாரம், முள்ளியவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிலாக்காலம்

— மகாலிங்கம் பத்மநாபன்

நீர் நிலைகளுக்கருகே பொருத்தமான, உயரமான மரம் இல்லாவிட்டால் தங்குவேட்டை சிரமம் வாய்ந்ததாகிவிடும். நீர் நிலையிலிருந்து சுமார் 75 அடி தூரத்தில் காற்று வீசும் திசைக்கு எதிர்த் திசையில் 8 அடி நீளம், 8 அடி அகலம், 8 அடி ஆழமுள்ள கிடங்கு வெட்டப்படும். பலமான 10 அடி நீளமரங்கள் குழியின் வாயை மூடி அடுக்கப்படும். அதன்மேல் இலைகுழைகள் பரப்பப்படும். அவற்றை மூடி மண் போட்டுச் சமப்படுத்துவர். ஒரு பதுங்குகுழி அமைக்கப்பட்டிருப்பது தெரியாதவாறு மண் முன்போலப் பரவப்பட்டுவிடும். ஒரு மனிதர் இறங்கி, ஏறுவதற்குரிய படியமைப்புகள் ஒரு மூலையில் இருக்கும். உள்ளிருந்தவாறே துப்பாக்கியை நீட்டிச் சுடத்தக்கவகையில் இரு துவாரங்கள் நீர் நிலைப்பக்கமாக அமைக்கப்பட்டிருக்கும். இந்த முறைமையில் சில சாதக, பாதகங்களும் உண்டு.

## கரடிக்கத்தலும் கலக்கமும்

பதுங்கு குழியிலிருந்து வேட்டையாடிய ஒரு வேட்டைக்காரரால் கூறப்பட்ட ஓர் உண்மைச் சம்பவம் மிகவும் சுவாரசியமானது. ஒருமுறை அனுபவம் குறைந்த ஒரு வேட்டைக்காரர் பன்றி என்று நினைத்து கரடியைச் சுட்டு விட்டார். அது கரடியைக் காயப்படுத்தியதே தவிர அதன் உயிரைப் பறிக்கவில்லை. கரடி ஓங்கிக் குரலெடுத்துக் கத்தத் தொடங்கிவிட்டது. அதன் அபயக்குரல் கேட்டு ஒரு கரடிக் கூட்டமே நீர் நிலையில் கூடி விட்டது.

நரிகளும் ஏதாவது வேட்டையின் மிச்சம் மீதி கிடைக்காதா எனச் சூழ நின்றன. ஆவேசமுற்ற கரடிகள் பதுங்குகுழியை நோக்கி உறுமியபடி வருவதும் போவதுமாயிருந்தன. இது போதாதென்று தூரத்தில் ஒரு சிறுத்தையின் உறுமலும் கேட்டது. வேட்டைக்காரர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர். பயந்து நடுங்கினர். அனுபவசாலியான வேட்டைக்காரர் மற்றவரை இறக்கிவிட்டுத் தாம் துப்பாக்கியை ஏந்தி நிதானமாகக் குறிபார்த்துக் காயப்பட்ட கரடியை நோக்கிச் சுட்டார். கரடியும் இறந்தது. சத்தமும் நின்றது. விலங்குகள் யாவும் நீர் நிலையை விட்டு விலகிச் சென்றன. விடியும் வரை பதுங்கியிருந்துவிட்டே வேட்டைக் காரர்கள் வெளியில் வந்தனர்

வேட்டையின் முடிவில் ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று மாதங்களுக்கான இறைச்சி வத்தல்களுடனும் கடைசி நாள் வேட்டையாடிய உடன் இறைச்சியுடனும் தத்தம் வீடு போய்ச்சேர்வது தங்குவேட்டையின் மூலம் கிடைக்கும் பலனாகும்.

## பேய் பிடித்தல்

வேட்டைக்கு அல்லது சுட்டதீவுக் கோவிலுக்கு சரியான திசை தெரியாது தனித்துச் செல்பவர்கள் காட்டில் திக்குத்திசை தெரியாது சுற்றிச்சுற்றி வருவர். பயம், தனிமை, பசி, தாகம், அலைச்சல் என்பவற்றினால் பித்துப் பிடித்தது போலாகி விடுவர். பாதை தெரியாததே உண்மைக் காரணம். இவர்கள் மீட்புக் குழுவினரால் மீட்கப்படும் போது பேய் பிடித்தவர் போல் இருப்பர். கோவில்களில் கலையாடி திருநீறு இட்டதும் முன்னிருந்த நிலையை அடைந்திடுவர்.

## குறிப்பம் புளி

பெரிய பரந்தனில் நூறு வருட காலப் பழமையான -பனைகளை விட உயர்ந்த- புளியமரம் ஒன்று உண்டு. காட்டில் எங்கிருந்தாலும் ஒரு சிறிய மரத்தில் ஏறிப்பார்த்தால் அந்த மரம் தெரியும். அதன் திசையை நோக்கி நடந்தால் எவரும் தவறாது வீடு வந்து சேரலாம். குறிப்பம் புளியின் அருமை உணர்ந்தவர்களைப் பேய் பிடிப்பதில்லை.

(இன்னும் நிலம் விரியும்)

# சின்ன உடை பெரிய விலை



ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நீச்சல் உடை இது. இதை அணிந்து கொள்ளும் பெண்ணால் நிச்சயம் எந்தவொரு ஆணையும் கவர முடியும் என்கிற அளவுக்கு படுகவர்ச்சியாகவும் உள்ளது.

200க்கும் அதிகமான வைரங்கள், மாணிக்கங்கள், மரகதங்கள் ஆகியவற்றால் இதில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இந்த நீச்சல் உடையை அணிந்து கொண்டு புன்னகையோடு காட்சி கொடுக்கிறார் டொமினிக்கன் குடியரசை சேர்ந்த விளம்பர அழகி மெலோடி மிர்.

# Matches – குறும்படம் பற்றிய பதிவு

எம்மவர்களில் இப்படியெல்லாம் திறமையாளர்கள் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட வைக்கின்றன அண்மைக் காலமாக வெளிவரும் குறும்படங்கள் . அடுத்தடுத்து வித்தியாசம் வித்தியாசமாக எம்மவர்கள் பலர் படைப்புக்களை உருவாக்கிக்கொண்டு வருகின்றார்கள். அந்தவகையில் அண்மையில் தாயகத்திலிருந்து எம்மவரின் புதிய முயற்சியாக லிங்கநேசனின் Matches; Stop Motion என்ற குறும்படம் வெளியாகியுள்ளது.

சிறுவயதிலிருந்தே அனிமேசன் படம் எடுக்கவேண்டும் என்ற தனது கனவை பூர்த்திசெய்திருக்கிறார் லிங்கநேசன். இணையத்தளத்தில் விடியோவில் படித்ததை மட்டுமே கொண்டு 'வெப் கமெராவை'ப் பயன்படுத்தி தேவையான பொருள்களை சிறு சிறு அசைவுகளுக்கு உட்படுத்தி அவற்றினை புகைப்படமெடுத்து தேவைக்கேற்றவகையில் வேகப்படுத்திபடமாக்கியிருக்கிறார்.

அவரின் இந்த வித்தியாசமான முயற்சியைப்பாராட்டியே ஆகவேண்டும்.

# கமெராவுக்குள் கழிப்பறை




சீனாவில் உள்ள ஒரு பொதுக்கழிப்பறையை மிகப்பெரிய டிஜிட்டல் கமெரா வடிவத்தில் அமைத்துள்ளனர். அந்தக் கழிப்பறையின் உள்ளே அதிநவீன முறையில் சுத்தப்படுத்தப்படும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சீனாவில் உள்ள ஷாங்சிங் என்ற நகரிலேயே மிகப்பெரிய டிஜிட்டல் கமெராஒன்றை வீதியின் ஓரத்தில் வைத்திருப்பதுபோன்ற பிரமாண்டமான கட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தைப் பார்த்தால் ஏதோ சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்காக அமைக்கப்பட்ட மாளிகைபோல் தோன்றும். ஆனால் உண்மையில் அது ஒரு பொதுக்கழிப்பறைக் கட்டம் என்று அதன் விளம்பர பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் இதை சீன மக்களால் நம்பவே முடியவில்லை.

கட்ட அமைப்பில் மட்டும் புதுமை இல்லை. உள்ளே சுத்தப்படுத்துவதற்கும் மிகவும் அதிநவீன முறைபின்பற்றப்படுகிறது. இந்த அதிநவீன பொதுக் கழிப்பறை சீன மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வல்லினம்

கிரிக்கெட் விளையாட்டின் மிகப்பெரிய வெளிச்சத்தில் மற்ற விளையாட்டுகள் இருளில் தவிக்கிறது என்ற கோபத்தை திரைக்கதையாக்கி இருப்பதோடு, அதை நேர்த்தியாகவும், நேர்மையாகவும் படமாக்கி வெளிவந்திருப்பதுதான் வல்லினம்.

கல்லூரி மாணவன் நகுலன் கூடைப்பந்து வீரன். விளையாட்டின்போது தனது தவறான நடத்தையால் உயிருக்கு உயிரான நண்பனை இழக்கிறார். அது விபத்துதான் என்றாலும் மனசாட்சி உறுத்த திருச்சியிலிருந்து சென்னை கல்லூரிக்கு மாறுகிறார். இனி விளையாடவே கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்த நகுலனை சூழ்நிலை மீண்டும் பந்தை தூக்க வைக்கிறது. கிரிக்கெட்டுக்கு முன்னுரிமையும், வசதியும் தரும் கல்லூரி நிர்வாகம், கூடைப்பந்து விளையாட்டை மதிப்பதில்லை. கூடைப்பந்து விளையாட்டின் மானம் காக்க, இது ஒன்றும் தாழ்வான விளையாட்டல்ல என்பதை நிரூபிக்க மீண்டும் மைதானத்தில் குதிக்கிறார் நகுலன். அவர் நினைத்தது நடந்ததா என்பது மீதிக் கதை. விளையாட்டை களமாக கொண்டு நிறைய படங்கள் வந்திருந்தாலும் அவை ஒரே விளையாட்டுக்குள் நடக்கும் மோதலாக இருக்கும். முதன் முறையாக கிரிக்கெட்டையும், கூடைப்பந்தையும் மோதவிட்டு கவனம் ஈர்க்கிறார் இயக்குனர்.

அச்சு அசலான கூடைப்பந்து வீரனாக மாறி இருக்கிறார் நகுலன். தேர்ந்த பயிற்சி, கடின உழைப்பால் கூடைப்பந்தின் இக்கட்டான தருணத்தின் அசத்தலான விளையாட்டில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்றார். மிருதுளாவுடனான காதல், அவள் கோடீஸ்வர வீட்டு பெண் என்று தெரிந்ததும் தாழ்வு மனப்பான்மையால் விலகிச் செல்வது, காதலால் விளையாட முடியாமல் தவிப்பது என ஒவ்வொரு காட்சியிலும் உணர்வுகளின் கலவையாக கலங்கடிக்கிறார் நகுலன். மிருதுளாவுக்கு முதல் படம், அது தெரியாத அளவுக்கு கனமான பாத்திரத்தை எளிதாகத் தாங்குகிறார். அவ்வப்போது நகைச்சுவை கொடுக்கும் ஜெகன், நண்பனாக வரும் அம்ஜத், கிரிக்கெட் அணித் தலைவனாக முறைத்துக் கொண்டே திரியும் சித்து எல்லோருமே பாத்திரமறிந்து நடித்திருக்கிறார்கள்.

நகுலின் சின்ன சின்ன விடயங்களால் கோடீஸ்வர வீட்டு பெண், காதல் வயப்படுவதும், ஆண்கள் கழிவறைக்குச் சென்று காதல் பேசுவதும், கோடம்பாக்க சினிமாக் காதல். காதலை கைவிட வேண்டும் என்கிற நிபந்தனையோடு அவளது தந்தை கோடிக் கணக்கில் முதலீடு செய்வதில் அர்த்தமில்லை. தமன் இசையில் பாடல்கள் இனிமை. கே.எம்.பாஸ்கரின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம்.

முறையாக நடத்தப்படும் ஒரு விளையாட்டின் இறுதிப் போட்டியில், திடீரென்று கறுப்பின வீரர்களை கொண்ட அணியை களம் இறக்குவது சாத்தியம் இல்லை. நீங்கள் எங்களை அணியில் சேர்க்கவில்லை என்றால் உங்கள் மகளை காதலித்து உங்களை மாமாவாக்கி விடுவோம் என்று ஒரு அதிபரை மிரட்ட முடியுமா? இப்படி சில விடயங்கள் படத்திலே வந்து போவதை தவிர்க்க முடியாவிட்டாலும் ரசிக்கலாம்.

# தெலுங்குப் படங்களில் நடிக்காதது ஏன்?

படப்பிடிப்பு நடைபெற்றபோது துப்பாக்கியுடன் வந்த நடிகரை பார்த்து பயந்ததால் தெலுங்கு படங்களில் நடிப்பதை நிறுத்தியுள்ளார் நீது சந்திரா.

ஆதிபகவன் படத்தில் நடித்திருப்பவர் நீது சந்திரா. இவர் தனது இணையதளத்திலே இதுபற்றிக் குறிப்பிடுகையில், டோலிவுட் படங்களில் நடிப்பதை நிறுத்தியது ஏன் என்று கேட்கிறார்கள். சமீபத்தில் நான் நடித்த சத்யமேவ ஜெயதே என்ற படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. அதை பார்த்தபோது பழைய ஞாபகம் வந்துவிட்டது. படப்பிடிப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அந்தப் படத்தில் நடித்த ராஜசேகர், கைத் துப்பாக்கியுடன் வந்திருந்தார். அதைக் கண்டு பயந்துவிட்டேன். அன்று முதல் தெலுங்குப் படங்களில் நடிப்பதை நிறுத்தினேன்.

விரைவில் தெலுங்கு படங்களில் நடிக்க உள்ளேன். நாகேஸ்வர ராவ், நாகார்ஜுனா, நாக சைதன்யா நடித் திருக்கும் மனம் என்ற படத்திலும் நடிக்கிறேன். நாகார் ஜுனா நடிக்கும் மற்றொரு படத்தில் அவருடன் இணைந்து நடிக்க உள்ளேன் என்றார்.





மதுஷாலினி

# கல்பனா ஹவுஸ்

'அவன் இவன்' படத்திற்கு பிறகு மதுஷாலினி தமிழில் நடிக்கும் புதிய படம் 'கல்பனா ஹவுஸ்'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் குமார் இயக்குகிறார். கல்பனா ஹவுஸ் படம் ஏற்கெனவே கன்னாடம், தெலுங்கில் எடுக்கப்பட்டு வெற்றியை பெற்றுள்ளது. இந்தப் படத்தில் வேணு, கார்த்திக், திரில்லர் மஞ்சு மற்றும் பலர் நடிக்கிறார்கள். லியாண்டர் இசையமைக்கிறார்.

ஜி. பார்த்திபன் ஒளிப்பதிவு.

பிரபல என்கவுண்டர் பொலிஸ் அதிகாரி தனது குடும்பத்துடன் ஓய்வெடுப்பதற்காக காட்டுக்குள் இருக்கும் விருந்தினர் விடுதியில் தங்குகிறார்.

அங்கு தங்கியிருப்பவர்களில் ஒவ்வொருவராக பழி வாங்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். இதற்கு காரணம் என்ன என்பதை மைசூர் காட்டுக்குள் திகிலூட்டும் பேய் படமாக உருவாக்கி வருகிறார்கள்.

படத்தின் பரபரப்பும், விறுவிறுப்பும் குறையாமல் இருப்பதற்காக பாடல்கள் இல்லாத படமாக தயாரித்து வருகிறார்கள்.

# பாலாஜி சக்தி வேலின் 'ரா ரா ரா'

உண்மைச் சம்பவங்களையும், யதார்த்தங்களையும் கொண்டு படம் இயக்குபவர் பாலாஜி சக்திவேல். இவர் இயக்கிய 'காதல்', 'கல்லூரி', 'வழக்கு எண் 18/9' ஆகிய மூன்று படங்களும் முக்கியமானவை. இதில் 'கல்லூரி' தவிர மற்ற இரண்டு படங்களும் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றன. 'வழக்கு எண் 18/9' படத்துக்கு தேசிய விருது உட்பட பல விருதுகள் கிடைத்தன.

பாலாஜி சக்திவேல் தற்போது அடுத்த படம் இயக்கத் தயாராகிவிட்டார். இந்தப் படத்தையும் திருப்பதி பிரதர்ஸ் தயாரிப்பு நிறுவனம் மூலம் லிங்குசாமி தயாரிக்கிறார்.

'காதல்', 'வழக்கு எண் 18/9' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த விஜய் மில்டன் இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்கிறார்.

முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கும் இப்படத்துக்கு 'ரா ரா ரா' என தலைப்பு வைத்துள்ளனர். ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது.

மனிதனுக்கு ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சில ஆபத்துகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும்போது ஏற்படும் பயத்தை வைத்து திரில்லராக இந்த கதையை எடுக்கப் போகிறாராம் பாலாஜி சக்திவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பப்பாளி

செந்தில்(மெர்சி), இஷா



## ஹொலிவூட்டை தவிர்த்த ரஹ்மான்

அங்காடி தெரு, அரவான் படங்களையடுத்து வசந்தபாலன் இயக்கும் படம் காவியத் தலைவன். சித்தார்த், பிருத்விராஜ், வேதிகா, நாசர், சந்தானம் நடிக்கின்றனர். நீரவ்ஷா ஒளிப்பதிவு, ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைக்கிறார். எஸ்.சஷிகாந்த், வருண் தயாரிக்கின்றனர்.

இந்தப் படம் குறித்து ரஹ்மான் குறிப்பிடுகையில்,

ஹொலிவுட் படம் ஒன்றுக்கு இசை அமைக்க பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்தநிலையில் வசந்தபாலன் என்னிடம் வந்து காவியத் தலைவன் படக் கதையை சொன்னார். மிகவும் பிடித்திருந்தது. கைவசம் வேறு சில படங்களும் இருந்தன. இசையமைத்தால் அந்த ஹொலிவுட் படம், அல்லது இந்த படம் என்ற நிலை ஏற்பட்டது. நான் ஹொலிவுட் படத்தை தவிர்த்துவிட்டேன். 1930களில் நாடக கலைஞர்களின் வாழ்க்கை, தொழில் போன்றவற்றை மையமாக வைத்து இக்கதை உருவாக்கப்பட்டது. சிறியதும், பெரியதுமாக 20 பாடல்கள் இடம்பெறுகிறது. அந்த காலத்தில் நாடகத்துக்கு இசை அமைத்தவர்கள் ஒரு பாணியை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த பாணியை ஒட்டியதாகவும், அதேசமயம் அதில் தேவை யான நவீன இசையையும் சேர்த்து இசை அமைக்க முடிவு செய்தேன். எந்த ராகத்தில் இசை அமைப்பது என்றுதான் பல நாட்கள் யோசனையில் ஆழ்ந்தேன். அதற்கான வழி கிடைத்ததும் உடனடியாக இசையை தொடங்கிவிட்டேன் என்றார்.

## கமலுடன் பார்வதி?



உலக நாயகன் கமலஹாசனின் அடுத்த படமான உத்தம வில்லன் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. கமலுடன் சதிலீலாவதி படத்தில் இணைந்து நடித்த ரமேஷ்அரவிந்த் படத்தை இயக்குகிறார். படத்தில் கமலுடன் 3 கதாநாயகிகள் நடிப்பதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில், தற்போது அந்த மூன்று நாயகிகள் ஒருவர் பெயர் மட்டும் வெளிவந்துள்ளது. ஏற்கனவே தமிழில் பூ, மரியான் படங்களில் நடித்த பார்வதி. இவர் தமிழில் நடித்த இரண்டு படங்களிலுமே அருமையாக நடித்திருந்தார். ஆனபோதும், அவருக்கு கோடம்பாக்கத்தில் சரியான படவாயப்புகள் இல்லை. அதன் காரணமாக மரியானுக்கு பிறகு தனது தாய்மொழியான மலையாள சினிமாவில் சில படங்களில் நடித்தவர் இப்போது பெங்களூர் டேட்ஸ் என்ற படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில், கமலுடன் நடிக்கும் வாய்ப்பு என்றதும் புதிய மலையாள படங்களை ஒத்துக்கொள்ளாமல் உடனடியாக உத்தமவில்லனில் நடிப்பதற்கு ஒத்துக்கொண்டுவிட்டாராம். இந்தப் படத்தில் மற்ற கதாநாயகிகளை விட பார்வதிக்கு முக்கியத்துவம் வாய்ந்த வேடம் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

## த்ரிஷாவுக்கு திருமணம்?



தி ரை யுலகில் சில காலம் கொடி கட்டிப் பறந்த த்ரிஷா சமீப காலங்களில் குறிப்பிட்ட ஒரு சில படங்களில் மாத்திரம் காணமுடிந்தது. தற்போது த்ரிஷாவைப் பற்றிய ஒரு செய்தி திரையுலகில் சுழன்றடித்துக்கொண்டிருக்கிறது. தெலுங்கில் பிரபல நடிகர் ராணாவுக்கும், த்ரிஷாவுக்கும் காதல் என்றும், விரையில் திருமணம் செய்ய இருப்பதாகவும் திரையுலக வட்டாரத்தில் கிசுகிசுக்கள் எழுந்துள்ளன. இது குறித்து த்ரிஷா குறிப்பிடுகையில்,

காதல், திருமணம் இதெல்லாம் நாமாக முடிவு செய்யமுடியாது. எப்போது நடக்குமோ அப்போது அது தானாக நடக்கும். நானும் அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

அதனால் நேரம் கைகூடி வரும்போது அந்த மகிழ்ச்சியான செய்தியை நானே அறிவிப்பேன் என்று கூறியுள்ளார்.



கமலஹாசனின் மகள் ஸ்ருதி உன்னை போல் ஒருவன் திரைப்படத்தில் இசையமைப்பாளர் மற்றும் பின்னணி பாடகியாக தமிழ் சினிமா உலகில் அறிமுகமானார். தற்போது தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்களில் முன்னனி கதாநாயகியாக இருந்து வருகிறார். சமீபத்தில் அனிருத்துடன் மான் கராத்தே படத்துக்காக பாடல் பாடியுள்ளார். விரைவில் கமல் நடிகக இருக்கும் த்ரிஷ்யம் மற்றும் உத்தமவில்லன் திரைப்படத்தில் ஸ்ருதி பாடப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரஜினியுடன் அனுஷ்கா?


ரஜினி நடித்துள்ள கோச்சடையான் ஏப்ரல் 10ஆம் திகதி திரைக்கு வரவுள்ளது. இதையடுத்து கே.எஸ்.ரவிகுமார் இயக்கும் படத்தில் நடிக்க திட்டமிட்டுள்ளாராம். இதில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க அனுஷ்காவிடம் பேச்சுக்கள் நடப்பதாக திரை யுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாம் உலகம் படத்தை அடுத்து பாஹுபலி, ராணி ருத்ரமம்மா தேவி என தெலுங்கில் 2 பிரமாண்ட படங்களில் நடித்து வருகிறார் அனுஷ்கா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காதலா? காமமா?

**தோ**ழமையோடு பழகும் இருவர் தங்களைச் சமூகத்தின் பார்வைக்காக காதலர்கள் என்று அறிவித்துக் கொள்வதும், உடைமைப் பொருளாக ஒருவரை ஒருவர் கருதிக் கொள்வதும் நேராமல் தவிர்க்க காதல்–காமம் என்ற இரண்டும் ஒன்றே என்று தெளியவேண்டும். பாலியல் கல்வி மூலம் சுய இன்பம் பற்றிய குற்ற உணர்வு போக்கப்பட்டுவிட்டால் பாலியல் தேவைக்காக எதிர்ப்பாலாரைச் சுரண்டும், ஏமாற்றும் போக்கு குறையலாம்.



மேலும் குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான வன்புணர்வு, உடல் சிதைப்பு, கொலை ஆகியவையும் இதன்மூலம் குறையலாம். அத்தோடு, ஒரு முதிர்ச்சியான மனநிலையில் தனக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடும் நிதானமும் கிட்டும்.

பெற்றோரும், சமூகமும் இராணுவ அதிகாரிகள் போன்று செயற்படுவது ஓர் எல்லை என்றால் சுதந்திரம் என்ற பெயரில் எல்லாவற்றையும் கேள்வியின்றி அனுமதிக்கும் மனநிலை மற்றொருவகையில் தீங்காக மாறுகின்றது. கேள்வியின்றி அனுமதிக்கும் சுதந்திர உறவைக் காட்டிலும் கேள்வி கேட்டாலும் அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும் உறவே இன்று அவசியமாகிறது. அது முற்றிலும் வெளிப்படைத்தன்மையை அறிவுபூர்வமாக அனுமதிக்கும் உறவாக இருப்பது பயனளிக்கும்.

இது பெற்றோர் – பிள்ளை உறவுகளில் மட்டுமின்றி, சமூகத்தின் எல்லா வகை உறவுகளுக்கும் பொருந்தும். காமம் என்ற உணர்வை கட்டுப்படுத்த வேண்டிய ஒன்றாக பார்ப்பதை விடவும் கையாளப்படவேண்டிய உணர்வாகப் பார்ப்பது அவசியம்.

காதலர்கள் தங்களது உணர்வுகளைப் பொதுவெளியில் வெளிப்படுத்துவது பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஆபாசமாக நடந்து கொள்கிறார்கள் என்பது ஒரு சாராரின் குற்றச் சாட்டு, அது அவர்களது சுதந்திரம் என்பது மற்றொரு சாராரின் கருத்து.

எவ்வகையில் உயிரியற்கை செயற்பாடுகள் ஆபாசம் எனப்படுகிறது? எவருக்கு அது ஆபாசம்?

நாய்களைப் போல் சில காதலர்கள் நடந்து கொள்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. நாய்களை நாம் கண்காணிப்பது நாய்களுக்குத் தெரியாது, அதைப் பற்றி அவை கவலைப்படுவதும் இல்லை. விலங்குகளை விடவும் ஒரு அறிவு கூட இருப்பதால் பகுத்தாராய வேண்டும், பண்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்போர் இந்தப் பகுத்தாராயும் திறனை பெரும்பாலும் உடலுறவு, பெண் நடத்தை சார்ந்த விடயங்களுக்குப் பொருத்திப் பார்ப்பதோடு நிறுத்திவிடுகின்றனர். தனிச்சொத்துப் பேணுதல், பொருள் சேர்ப்பதற்காக செய்து கொள்ளும் சமரசம், சமூகத்தில் நிலவும் படிநிலைப் பாகுபாடு, சாதியப் பாகுபாடு, லஞ்ச லாவண்யம், சர்வாதிகாரப் போக்கு ஆகியவற்றில் எத்தகைய பண்பையும், பகுத்தறிதலையும் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக உடலை விற்பனைப் பொருளாக பயன்படுத்தும் திரைத் துறை, ஊடகத் துறையினருக்கு ஏன் அத்தகைய பண்பு பொருந்துவதில்லை? முறையற்ற உடலுறவு புனிதக் கேடு என்போர் முறையுடன் உறவு கொள்ளும் முறையை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்னர் இருந்த சமூக அமைப்பை அறிந்திருக்கவில்லையோ எனும் ஐயமும் ஏற்படுகிறது. **(இன்னும் பேசுவோம்)**

# காதல் பேசுவோம்

**கா**தலில் விழுந்துவிட்டவர்களில் நீங்களும் ஒருவரா? அப்படியென்றால் இந்தப் பதிவு உங்களுக்காகத் தான். காதல் என்பது ஒரு அழகான விஷயம். அதே அளவுக்கு ஆபத்தானதும் கூட. காதல் எப்போது அழகாகும், எப்போது ஆபத்தாகும் என்று சொல்ல முடியாது. இந்தக் காதலில் விழுந்தவர்கள் எப்போது பார்த்தாலும் செல்போனும் கையுமாக அலைவார்கள். அப்படி அவர்கள் என்ன தான் பேசுவார்கள் என்று காதைத் தீட்டி ஒட்டுக் கேட்டால் பெரும்பாலும் அவர்களின் உரையாடல் "ம்" என்ற ஒற்றைச் சொல்லாகவே இருக்கும். காதலிக்கும் இருவரும் போனின் இரு முனைகளிலும் மாறி மாறி "ம்" என்று சொல்லிக் கொள்வார்கள்.



"ம்" சொல்வது அவர்களுக்கே அலுத்துவிட்டால் "அப்புறம்?"

"வேற...?" என்ற வேறு சொற்களை அதிசயமாக உபயோகிப்பார்கள். இருவருக்கும் பேசுவதற்கு எந்த விடயங்களும் இல்லாவிட்டாலும் கூட விடியும் வரை இனிக்க இனிக்க செல்போனுக்கு வலிக்க வலிக்க பேசிக்கொண்டே இருப்பார்கள். அல்லது செல்போனுக்கு நோவெடுக்கும் வகையில் எஸ்.எம்.எஸ் அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். இப்படிப் பேசுவதற்கு எந்த விடயமும் இல்லாவிட்டாலும் தம்மை மறந்து உரையாடும் காதலர்களைப் பார்க்க ஒருபுறம் சினமும் இன்னொரு புறம் ஆச்சரியமும் ஏற்படுவதுண்டு.

காதலனோ காதலியோ எதை, எப்படிப் பேச வேண்டும் எதைப் பேசக் கூடாது என்று அவர்களுக்குள்ளாகவே எழுதப்படாத சில விதிகள் உண்டு. பெரும்பாலும் இந்த விதிகளைக் கடைபிடிக்க வேண்டியது காதலன் தான். காதலிகள்தான் இப்படியான கட்டுப்பாடுகளை விதிப்பதுண்டு. அப்படியான காதலன் கடைபிடிக்க வேண்டிய காதல் விதிகள் இங்கே –




1. நீங்கள் எந்த முக்கியமான வேலையில் இருந்தாலும் உங்க காதலியின் தொலைபேசி அழைப்பை எடுக்காமல் விட்டுவிடாதீர்கள். அலுவலகத்தில் முக்கியமான கூட்டத்தில் இருந்தாலும் கூட எடுத்து ஒரு "ஹலோ" சொல்லிட்டு அப்படியே தொலைபேசியை இயங்கு நிலையில் வைத்திருங்கள். நீங்கள் தான் சொல்வதைத் செவிமடுக்கிறீர்களா இல்லையா என்ற கவலையே இல்லாமல் மணித்தியாலக்கணக்கில் உங்கள் காதலி தான் சொல் நினைத்ததையெல்லாம் ஒரே மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டிருப்பாள். இடையிடையே நீங்களும் ஒப்புக்காக "ம்" "வேற" என்பன போன்ற சொற்களை எடுத்துவிடுங்கள். உங்கள் அலுவலைக் கவனித்த மாதிரியும் ஆயிற்று. காதலியின் தொலை பேசி அழைப்புக்கு செவிமடுத்த மாதிரியும் ஆயிற்று. 'என்னதான் வேலை இருந்தாலும் என் காதலன் என்குரலுக்காக தவம் கிடக்கிறான்' என்ற எண்ணம் உங்கள் காதலியின் மனதில் எப்போதும் இருக்க இந்த உத்தியை நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ கையாளத்தான் வேண்டும். இது உத்திமட்டுமல்ல உங்கள் காதலி இடுகின்ற முதல் கட்டளையும் இதுதான்.

**(விதிகள் தொடரும்)**

## ஈரடியில் இதயங்கள் பற்றி...!

**இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.**

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.
(குறள் 1081: அதிகாரம் – தகையணங்குறுத்தல்)

ஜிமிக்கியின் அதிர்வில்
மிக நினைவூட்டுகிறாள்
ஒரு பச்சை நீல மயிலை
ஒரு வான் தேவதையை.

சரவணா கார்த்திகேயன்

## வாசகிக்குப் பரிசு




**" காதல் பரிசு; உங்களுக்கும் பரிசு" பகுதியில் சிறந்த படைப்பை எழுதியமைக்காக புனித செபஸ்தியார் வீதி, கோண்டாவிலைச் சேர்ந்த ஜசிதா நவரத்தினம் என்ற வாசகிக்கு 1000 ரூபா பணப்பரிசினை உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வழங்கிக் கௌரவித்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னுவதெல்லாம் பொன்னல்ல



குழந்தைகள் தான் ஒரு குடும்பத்தின் சந்தோசம்.அந்தக் குடும்பத்தின் இருப்பு,உழைப்பு மற்றும் சேமிப்பு போன்ற பல்வேறு விடயங்களும் குழந்தைகளுக்கானதாக அவர்களின் எதிர்காலத்திற்கு நன்மை சேர்ப்பதான வழியிலேயே கருதப்படுகின்றன.ஒரு குழந்தையின் சிரிப்புப் போதும் உலகின் அதிசய இசை அத்தனையையும் ஒன்றாக கேட்கமுடியும்.

இத்தகைய பிள்ளைகளுக்காக அவர்கள் கேட்கின்ற சின்னச்சின்ன பொருட்களை வாங்கிக்கொடுத்து அவர்களை சந்தோசப்படுத்தலாமே என்கின்ற மனோ நிலை இன்று எங்களுடைய பல குடும்பங்களில் காணப்படுகின்றது.அதில் தவறில்லையாயினும் தேவைக்கு அதிகமாக அல்லது அடிக்கடி பொருத்தமில்லாமல் குழந்தைகளுக்கு பொருள்களை வாங்கிக் கொடுப்பது அவர்களின் மனோநிலையில்.எதிரான அல்லது பாதகமான எண்ணப்பாட்டை உருவாக்கலாம்.

இந்த மனநிலை குழந்தைகளின் எதிர்காலத்தில் எதையும் கடினப்பட்டு தாமாக தேடாமல் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்ள எண்ணுவதற்கு காரணமாக அமைகின்றது.மாறாக குழந்தைக் காலத்தில் அவர்களினுடைய சாதனைகள், வெற்றிகளுக்கு நீங்கள் பரிசில்களை அளிக்கின்ற போது அதற்குப் பெறுமதி அதிகமாக இருப்பதோடு எதிர்காலத்திலும் எதையும் போராடி நேரிய வழியில் பெற்றுக்கொள்ள அவர்களைத் தூண்டும்.



இனிமேல் அளவுக்கதிகமாக அல்லது ஒரு அழுகைக்கு அடங்கிப்போய் உலகத்தையே வாங்கிக்கொடுக்கின்ற முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்.பார்க்கின்ற எல்லாவற்றுக்கும் ஆசைப்படக்கூடாது என்பதை பக்குவமாக சொல்லிக் கொடுங்கள். தேவைப்படுகின்ற தருணங்களில் மட்டும் அளவாக வாங்கிக் கொடுங்கள்.பெறுமதியோடு வாங்கிக்கொடுங்கள்.உங்கள் குழந்தைகளின் வாழ்க்கையையும் பெறுமதியாக்குங்கள்.

# ஒரு கை தட்டினால்...



அலுவலகம் முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.வீட்டில் இருக்கின்ற என்னுடைய இரண்டு வண்டுகளுக்கும் ஏதாவது வாங்கிக்கொண்டு போகலாம் என்று அருகிலிருந்த கடைக்குள் நுழைந்து இருவருக்கும் இரண்டு விளையாட்டுப் பொருள்களை வாங்கிக்கொண்டு வெளியே வந்தேன்.விளையாடுகிற வயதில்தானே விளையாடவேண்டும்.

வீட்டுக்குப்போய் உள்ளே நுழைந்தால் என்னுடைய அம்மா - அவர்களினுடைய பாட்டி - ஏதோ அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறா.

"எல்லாம் அம்மா தாற இடம் தான். சின்னனிலேயே திருத்தி வைக்கச்சொன்னா கேட்கிறாளே. அவனுக்கு குடுக்கிறதெல்லாம் உனக்கும் வாங்கித் தந்து உன்னையும் அவன மாதிரி வைச்சிருக்கிறாள். சொன்னாலும் கேட்கிறாளே."

எனக்கு விடயம் விளங்கிவிட்டது.என்ர மகள் கலைமதிக்குத் தான் நடக்குது.ஏனெண்டு பார்த்தால் அவளும் அவனும் முற்றத்தில் நிண்ட சின்ன மரத்தில ஏறி நிக்குதுகள்.அது தான் இப்ப பிரச்சினை.நான் அவளைக் கவனிக்கிறேலயாம்.பொம்பிளப்பிள்ள எண்டில்லாம தம்பி மாதிரியே எல்லாம் செய்யிறாளாம். இதில் அம்மா என்ன கோவிக்கிறதுக்கு என்ன காரணமென்றால் நான் தான் இரண்டுபேருக்கும் ஒரே மாதிரி சூழல் ஏற்படுத்த பாக்கிறன்.இந்தா இப்பவும் இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி. கார் தான் விளையாட வாங்கி வந்தனான். குழந்தைமனநிலையில் அவர்களிற்கு ஏற்படுகிற பதிவும் அவர்களைச் சார்ந்த சூழலின் சமூகமயமாக்கலும் தான் பெண்களின் மனோநிலை மாற்றத்திற்கு காரணம் எண்டு நான் நினைக்கிறன்.அதனால தான் என்ர குழந்தைகளுக்காவது ஒரே மாதிரியான சூழல் உருவாக்கி குடுப்பம் எண்டு பாத்தா அம்மா அதுக்கு விடுறா இல்ல.

நான் குழந்தைகளுக்கு விளையாட்டுப்பொருட்களை கொடுத்துவிட்டு வீட்டு வேலைகளையும் கவனித்து அவர்களிற்குப் பாடம் சொல்லிக்கொடுத்து அன்றைய நாள் கழிந்தது. மறுநாள் வழமைபோல பிள்ளைகளை பாடசாலைக்குக் கொண்டுபோய்விட்டுவிட்டு, நான் வேலைக்குப்போய் வேலைமுடிந்து வீடு வந்தேன். வாசலிலேயே மதி கதைசொல்லத்தொடங்கிவிட்டாள்.

எவ்வளவு வடிவு தெரியுமே அம்மா.பாக்க நல்ல வடிவா இருந்தது.அத மாதிரி எங்கட வகுப்பில தனு,மதுரா,கவிதா எல்லாரும் வைச்சிருக்கினம். என்னட்ட மட்டும் தான் .இல்ல.நீங்க வாங்கித்தரேலை.."

"அது என்ன எண்டு நீங்க இன்னும் சொல்லேலயே.."

"நல்ல நீட்டு தலைமுடி எல்லாம் இருந்ததம்மா.. வடிவான சட்டையெல்லாம் போட்ட பொம்மை. நீங்க எனக்கு வாங்கித்தந்தா நான் அதுக்கு ஒவ்வொரு நாளும் தலையிழுப்பன்.கலர்கலரா ரிபனால தலை முடிய கட்டிவிடுவன்.கழுத்துக்கு நகையெல்லாம் போட்டு வடிவா வைச்சிருப்பன்.."

அவர்களினுடைய பாலர்பாடசாலையில் இன்று பொம்மை கொடுத்து விளையாடவிட்டிருக்கிறார்கள்.அது தான் இந்தத் தாக்கம். இப்போ அவளுக்கு பொம்மை மட்டும் தான் மனதில் இருக்கிறது.இனி அது இல்லை என்றால் எதுவும் செய்யமாட்டாள்.நாளைக்கு வேலை முடிந்து வரும்போது பொம்மையோடு தான் வரவேண்டும்.

தனியன் ஒன்றல்ல சமூகம்.பல தனியன்கள் சேர்ந்ததே சமூகம்.நான் மட்டும் முயன்று என்ன செய்ய ..? சமூகமயமாக்கலில் வெளியுலகம் என்று ஒன்றும் இருக்கிறதே.!

ஆளுக்கு ஏற்ற ஆடை. ஆடைக்கு ஏற்ற அலங்காரம். கச்சிதமாக பொருந்துமானால் எந்தவொரு பெண்ணும் தனி அழகு தான். ஆனால் இப்போது தான் எம் பெண்கள் ஆள்களுக்கு ஏற்ற ஆடைகளையும் தெரிவுசெய்வதில்லை. அதற்கேற்ற அலங்காரத்தையும் கவனிப்பதில்லை. 'பஷன்' என்கின்ற பெயரில் கண்றாவியாக தெரிகிறர்களே



# பஷன் என்பது என்ன?

புதுப்புது 'பஷன்' ஆடைகளிலும் சரி அலங்காரத்திலும் சரி அழகு இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அதை தெரிவுசெய்கின்ற முறையிலும் நடந்துகொள்கின்ற முறையிலும் தான் எம் சகோதரிகள் பிழை விட்டுவிடுகிறார்கள்.

குட்டைப்பாவாடை அணிய ஆசைப்படுகிறீர்களா? சரி பரவாயில்லை. உங்கள் உடலமைப்பு அதற்குப் பொருத்தமாக இருக்கின்றதா என்று முதலில் பார்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் சிலரின் உடலமைப்புக் குட்டைப்பாவாடைகளுக்கு பொருத்தமாக காட்டினாலும் பலரின் உடலமைப்பு விரசமாகவே காட்டுகிறது.

தெரிவுசெய்கின்ற ஆடை காற்றில் பறக்கக்கூடியவாறு வழுவழு என்றில்லாமஷ் பார்த்துக்கொள்ளுங்கள். ஸ்கூட்டிகளில் போகின்ற போது அமர்கின்ற விதத்தில் பக்குவத்தை பேணுங்கள்.இப்போ பலரும் பறக்கவிட்டு திரிவதை தான் "பஷன்" என்று எண்ணுகிறர்கள்.ஆனால் எதையும் பக்குவமாக பேணுவதில் தான் அழகு இருக்கிறது சகோதரிகளே..

தலைமுடியை கட்டையாக வெட்டிக்கொள்கிறார்கள். பரவாயில்லை. அது அவர்கள் வேலைகளை இலகுவாக்குவதற்காக இருக்கட்டும். ஆனால் அதை பிறகு தலைவிரிகோலமாக பறக்கவிட்டுக்கொண்டு திரிந்தால் அதில் என்ன அர்த்தமிருக்கிறது. திருமண சடங்குகளுக்கு கூட தலைவிரி கோல மாக வந்தால் ஒரு மரணவீட்டுக்கும் திருமண வீட்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கப் போகிறது சகோதரிகளே

அழகு பக்குவத்தோடு இணைந்ததாக இருக்கிறது.பிறகு ஏன் வீண் பறப்புகள்?சிந்தித்து உண்மை அழகைச் சந்திக்க முயற்சி செய்யுங்கள்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமை கொள்ளவைத்த நண்பன்

**கே.எஸ். பாலச்சந்திரன்** என் இனிய நண்பர். சிறந்த படைப்பாளி. நல்ல நடிகர். அவரை ஒரு சுயம்பு என்று தான் நான் சொல்வேன். ஒரு சிறந்த படைப்பாளியாக அவர் எழுதிய நாடகங்களை நெறிப்படுத்தக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குறிப்பாக அவரின் கிராமத்துக் கனவுகள் என்ற நாடகத்தை நான் வானொலிக்காகத் தயாரித்தேன்.

அந்த நாடகத்தைக் கேட்டவர்களின் மனத்திரைகளில் ஒரு திரைப்படத்தை அவர்கள் உருவகிக்கக்கூடிய அளவுக்கு கே.எஸ். பாலச்சந்திரனின் எழுத்து உயிரோட்டமானதாக , உணர்வுபூர்வமானதாக அமைந்திருந்தது.

நகைச்சுவை நடிப்பிலும் சோபித்து விளங்குபவர்கள் சோகத்தை வெளிப்படுத்தும் படைப்பாற்றலிலும் இவரைப் போல் சோபித்துக் கொண்டு வேறு எவராது இருக்கின்றார்களா? என்று கேட்டால்..... இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவுக்கு அற்புதமான திறமைகளைக் கொண்ட உன்னதமான ஒரு கலைஞர் அவர்.

சில வருடங்களுக்கு முன்பு அவரைப் பெருமைப் படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்காக மிகவும் சந்தோஷப்பட்டேன்.

தெனாலி படத்தில் கமல் நடித்துக் கொண்டிருந்த போது கே.எஸ். பாலச்சந்திரனின் கிராமத்துக் கனவுகள் என்ற வானொலி நாடகத்தின் ஒலி நாடாவையும் கமலிடம் கொடுத்திருந்தேன்.

அதைப் போட்டுக் கேட்ட கமல் "அந்த கிராமத்துக் கனவுகள் என்ற நாடகம் யார் எழுதியது? அது என்னை மிகவும் பாதித்தது" என்று சொன்னார். நான் "கே.எஸ். பாலச்சந்திரன் என்ற என்னுடைய நண்பர்தான் எழுதினார்" என்பதைப் பெருமிதம் பொங்கச் சொன்னேன்.

தெனாலி படப்பிடிப்பு முடிவடைந்தபின் கமலஹாசன் கனடா சென்றிருந்தபோது ரி.வி. சிலோன் என்ற தொலைக்காட்சிக்காக அவரை கே.எஸ். பாலச்சந்திரன் பேட்டிகாணச் சென்றிருந்தார். அப்போது பாலச்சந்திரன் யார் என்று அறியாமலேயே கிராமத்துக் கனவுகள் நாடகத்தைப் பற்றி கமல் புகழ்ந்து தள்ள பாலச்சந்திரன் நெகிழ்ந்து விட்டாராம்.

கே.எஸ். பாலச்சந்திரன் என்ற ஒரு சிறந்த கலைஞனை, கமல் என்ற ஒரு இமய நடிகருக்கு அறிமுகப் படுத்தக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை, என் நண்பருக்கு என்னால் செய்யமுடிந்த சிறு தொண்டாகக் கருதுகிறேன்.

பின்பு,தெனாலி வெள்ளிவிழா மேடையில் கே.எஸ். பாலச்சந்திரனைப் பற்றி கமல் பேசியதை எல்லாம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

அதைக் கேட்க எனக்கு அளவற்ற ஆனந்தமும், பெருமையுமாக இருந்தது.


பீ. எச். அப்துல் ஹமீத்

# "அண்ணை ரைட்"

-குரு அரவிந்தன்

"அண்ணை ரைட்" என்ற கணீரென்ற குரல் மூலம்தான் கே.எஸ் பாலச்சந்திரன் எனக்கு முதன் முதலாக அறிமுகமானார். அப்பொழுதெல்லாம் பேருந்து சாரதியை மரியாதை கருதி அண்ணை என்றுதான் நடத்துநர்கள் அழைப்பார்கள். அச்சுவேலியில் இருந்து சங்கானைக்கு ஒரு பேருந்து சுன்னாகம் வந்து, காங்கேசன்துறை வீதிவழியாக மல்லாகம் சென்று, அளவெட்டி வழியாகச் சங்கானைக்குச் செல்லும். அதிலே உள்ள நடத்துநரும் இப்படித்தான் "அண்ணைரைட்" என்று குரல் கொடுப்பது வழக்கம். பயணிகளில் அநேகமானவர்கள் அவருக்கு அறிமுகமானவர்களாகவே இருப்பர். அவர் வாய் நிறைய வெற்றிலை பாக்குப் போட்டிருப்பார். காக்கித் துணியில் நாலு பைகள் உள்ள மேற்சட்டை அணிந்திருப்பார். வண்டி நின்றதும் அவசரமாக வேலியோரம் சென்று வாயில் குதப்பிய வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்துவிட்டு வந்து "அண்ணைரைட்" என்று கம்பீரமாகக் குரல் கொடுப்பார். பாலா அண்ணையின் அண்ணைரைட் நாடகத்தைக் கேட்கும் போதெல்லாம் நேரே பார்க்கும் காட்சிபோல, அந்த நடத்துநரின் ஞாபகம் வரும். நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது தொலைக்காட்சி பிரபலமாகாததால், ஒலியை மட்டும் கேட்கக்கூடிய இலங்கை வானொலிதான் எங்கள் வீட்டிலே உள்ளகப் பொழுது போக்குச் சாதனமாக இருந்தது. இலங்கை வானொலியில் இவரது குரல் பல தடவைகள் ஒலித்தாலும் அனேகமான ரசிகர்களைக் கவர்ந்தது இவர் கதாநாயகன் சோமுவாக நடித்த தணியாத தாகமும், இவரது தனிமனித நாடகமான, பேருந்து நடத்துநராக நடித்த அண்ணை ரைட்டும்தான்(1973) . அன்றைய காலக்கட்டத்தில், பலரை விம்மி விம்மி அழவைத்த நாடகமாகத் தணியாத தாகமும், 500 தடவைகளுக்குமேல் மேடையேற்றப்பட்டு, பலரை வயிறு குலுங்கிச் சிரிக்க வைத்த நாடகமாக அண்ணைரைட் நாடகமும் அமைந்திருந்தன.

நாடக, சினிமா நடிகராக, நாடக எழுத்தாளராக, இயக்குநராக இருந்த பாலாஅண்ணா ஒரு எழுத்தாளராக மாறியது ஒன்றும் அதிசயமல்ல. நிறைய வாசிக்கும் பழக்கம் கொண்ட அவரிடம் பன்முக ஆளுமை இருப்பதை நான் அவருடன் உரையாடும்போது பல தடைவ அவதானித்திருக்கின்றேன். கரையைத் தேடும் கட்டுமரங்கள் என்ற அவரது முதலாவது நாவலை வாசித்துவிட்டு நிச்சயமாக பரிசுக்குரிய ஒரு நாவல் இது என்பதை எனது நூல் ஆய்வுக் கட்டுரையில் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தேன். 2009ஆம் ஆண்டுக்கான அமுதன் அடிகள் இலக்கிய விருது தமிழகத்திலிருந்து அவரது கரையைத் தேடும் கட்டுமரங்கள் என்ற நூலுக்குக் கிடைத்தபோது எனது கருத்தை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்ததை எண்ணிப் பெருமைப்பட்டேன். அதைத் தொடர்ந்து அவரது நேற்றுப்போல இருக்கிறது என்ற நூலும் வெளிவந்து வாசகர்களிடையே சிறந்த பாராட்டைப் பெற்றிருக்கின்றது. இவரது முதல் மேடை நாடகம் 1965இல் நெல்லியடியில் மேடையேறியது. புறோக்கர் பொன்னம்பலம் என்ற நகைச்சுவை நாடகத்தில் தேனீர்க்கடை முதலாளியாக இவர் நடித்திருந்தார். இலங்கை வானொலியில் விளையாட்டுத்துறை நேர்முக வர்ணனையாளராகவும் கடமையாற்றியிருக்கின்றார். கனடாவில் தமிழர் தகவல் விருது, உதயன் விருது, உலகப் பண்பாட்டு இயக்க விருது, கனடிய கலைஞர் கழக விருது போன்றவற்றை இவர் பெற்றிருப்பது இவரது சாதனைகளை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.



## கே.எஸ். பாலச்சந்திரன் – சில குறிப்புகள்

கே. எஸ். பாலச்சந்திரன் என்று அறியப்படும் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன் யாழ்ப்பாணம் வடமராட்சியின் கரவெட்டியில் ஜூலை 10 ஆம் திகதி 1944 ஆம் ஆண்டு பிறந்து, 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 இல் கனடாவில் மறைந்தார்.

இவர் ஈழத்தின் அறியப்பெற்ற பல்துறைக் கலைஞர். நகைச்சுவை, வானொலி, நாடகம், நடிப்பு, திரைப்படம், தொலைக்காட்சி, எழுத்து எனப் பல துறைகளில் தன் முத்திரையினைப் பதித்தவர். ஈழத்து கலைத்துறைகளில் நெடுங் காலம் செயற்பட்ட இவர், பின்னர் கனடாவுக்கு குடிபெயர்ந்து தொடர்ந்து இயங்கி வந்தார். பாலச்சந்திரன் இலங்கையில் பிரபலமான வானொலி நடிகர்களில் ஒருவர். ஏறக்குறைய 20 ஆண்டுகளாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையிலும், வர்த்தக சேவையிலும் ஒலிபரப்பான ஏராளமான வானொலி நாடகங்களில் நடித்ததோடு, தணியாத தாகம் என்ற பலரும் அறிந்த வானொலி தொடர் நாடகத்தில் சோமு என்ற பாத்திரத்தில் நடித்தவர். இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான நாடகங்களான நிஜங்களின் தரிசனம், உதயத்தில் அஸ்தமனம், திருப்பங்கள் போன்றவற்றில் நடித்ததோடு காதம்பரி நிகழ்ச்சியில் பல குறு நாடகங்களை எழுதி நடித்திருக்கிறார். இலங்கையில் வாடைக்காற்று, அவள் ஒரு ஜீவநதி, நாடு போற்ற வாழ்க, ஷர்மிளாவின் இதய ராகம், Blendings (ஆங்கிலம்) அஞ்சானா (சிங்களம்)ஆகியதிரைப்படங்களிலும்,கனடாவில் உயிரே உயிரே, தமிழிச்சி, கனவுகள், மென்மையான வைரங்கள், சகா, என் கண் முன்னாலே, 1999 ஆகிய திரைப்படங்களிலும்நடித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஔண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன் 43



© AP

**தி**க்கற்றவர்களுக்கு தெய்வம் துணை என்பார்கள். யூலியனும் தப்பிப்பதற்கான வழியேதுமின்றி தவித்துக் கொண்டிருந்த போதுதான் பண்ணை வீட்டில் யூலியனைச் சந்திக்கச் சில நாடுகளின் தூதுவர்கள் விரும்புவதாக ஒருவர் தகவல் தெரிவித்தார். சில நிமிட ஆலோசிப்புக்கு பின்னர் யூலியனும் அந்தச் சந்திப்புக்கு தலையசைத்தான். ஆனால் அந்தச் சந்திப்பு பண்ணை வீட்டில் நிகழ்வதை அவன் விரும்பவில்லை.

"அப்படியானால் எங்கு பாதுப்பான இடம் இருக்கிறதோ அங்கு வைத்துக் கொள்ளலாம்" என்று வந்தவர் சொன்னார்.

"அப்படியான இடமொன்று லண்டனில் இருப்பதாகத் தெரியவில்லை. எதற்கும் நான் உங்களிடம் ஒரு இடத்தைச் சொல்கிறேன். அங்கு அந்த தூதுவர்களை சாதாரணமானவர்களைப் போல ஆடையணிந்து வரச்சொல்லுங்கள்" என்று கூறிய யூலியன், ஒரு காகிதத்தில் மளமளவென்று தனக்கு நம்பகமான விடுதியொன்றின் பேரை எழுதி அவரிடம் கொடுத்தார். வந்த வரும் அன்று மாலையே தூதுவர்களுடன் குறிப்பிட்ட விடுதிக்கு வருவதாகச் சொல்லிவிட்டு சென்றார்.

மாலை மங்கத் தொடங்கியது.

குட்டி போட்ட பூனைபோல யூலியன் அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினான். எதற்காக அந்தத் தூதுவர்கள் தன்னைச் சந்திக்க விரும்புகிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை.என்றாலும் தன்னைச் சந்திக்க விரும்பும் தூதுவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகள் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கையைக் கொண்டவை. ஆயினும் அவற்றை எவ்வளவுதூரம் நம்பிச்செயற்பட முடியும் என்பது கேள்விக்குறிதான். ஏனெனில் அமெரிக்காவின் பலத்துக்கு முன்னால் இந்த நாடுகள் எல்லாம் தூசு போன்றவை.

யூலியனுக்கு உதவினால் உங்கள் நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என்று லேசாக மிரட்டினாலே "ஐயோ! அப்படியொன்றும் செய்துவிடாதீர்கள் தர்மப்பிரபுவே" என்று அடுத்தகணமே அமெரிக்காவை அட்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு யூலியனைத் தூக்கியெறியவும் கூடும்.

எனவே மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதா? இல்லையா? என்று யூலியனுக்கு குழப்பமாக இருந்தது. என்றாலும் சிலசமயங்களில் மண்குதிரை ஆற்றில் கரைந்து போகாமல் கரை சேர்ந்தால் லாபம் தானே. யூலியனுக்கு இதைவிட்டாலும் வேறு தெரிவுகள் எதுவும் இப்போதைக்கு இருக்கவில்லை. எனவே சந்திப்பின் போது தன்னை பிரிட்டனில் இருந்து எப்படியாவது மீட்குமாறு அந்த நாடுகளிடம் கோரிக்கை விடுவதென்று முடிவு செய்தான்.

இப்போது அடுத்த சிக்கல்.

யூலியன் பண்ணைவீட்டை விட்டு வெளியே சென்றால், வாசலில் நாக்கைத் தொங்கபோட்டுக் கொண்டு காத்திருக்கும் பிரிட்டன் உளவாளிகளின் கண்ணில் பட்டேயாகவேண்டும். அப்படி அவர்கள் பார்வையில் விழுந்துவிட்டால் நிழல் போல பின் தொடர்ந்து யூலியன் குறித்த நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்து உரையாடுவதைக் கண்டுபிடித்து விடுவார்கள். பிறகு யூலியன் தலைகீழாக நின்றாலும் இங்கிருந்து தப்பிக்கவே முடியாது போய்விடும். எனவே மாற்றுவழியொன்றை யூலியன் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

காலையில் வேற்று நபர் ஒருவர் பண்ணைவீட்டுக்குள் நுழைந்ததையும் பிரிட்டன் ஒற்றர்கள் மோப்பம் பிடித்திருப்பார்கள். எனவே கொஞ்சநாளைக்கு கண்காணிப்பை இன்னும் இறுக்கமாகப் பேணுவார்கள்.

சில நாள்களுக்கு நாளைக்கு இந்தச் சந்திப்பைத் தள்ளிப்போட்டுவிட்டு எல்லாம் தணிந்ததும் வெளியே சென்று அவர்களுடன் திட்டமிட்டால் என்ன? என்றும் யூலியன் யோசித்தான் . ஆனால் மறுகணமே அந்தத் திட்டத்தை மூடை கட்டிவைத்தான். ஏனெனில் அவன் வசம் உள்ள காலம் மிகக்குறுகியது. சில சமயங்களில் அவன் மறுநாள் காலை கூட நாடுகடத்தப்படலாம். எனவே காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள முடிவெடுத்தான். அப்படி முடிவெடுத்த சமயத்தில் வெளி யேறுவதற்கான வழியொன்றும் பிறந்தது.

**(திரைகள் இன்னும் திறக்கும்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல இயக்கத்தின் நிதி நிலை இக்கட்டானதாகவே இருந்தது. உணவுக்காக ஆளுக்குப் பத்து ரூபா மட்டுமே செலவிடலாம். போராளிகள் ஒவ்வொருவரும் இரண்டு மாற்றுடைகள் மட்டுமே வைத்திருக்கலாம். ஆண்டுக்கு இரண்டு தடவையே புதுத்துணி. வாரம் ஒருதடவை சினிமா பார்க்க ஒவ்வொருவருக்கும் கைச்செலவுக்குப் பணம் தரப்படும். மதுவிலும் புகைத்தலிலும் மட்டும் செலவே இராது. ஏனென்றால் இயக்கப் போராளிகளுக்கு அவை மூற்றாகத்



தடை செய்யப்பட் டு இருந்தன.

இருந்த போதிலும் என் மட்டில் தாராளமாகவே நடந்து கொண்டனர். நான் அவர்களுடைய 'செல்லப் பிள்ளை' யான எனக்கு கடைத்தெருவிலும் சேலை வாங்கித் தருவார்கள். கேட்டது எல்லாம் கிடைத்தது. பாலா வுக்குப் புதிய கண்ணாடி கிடைத்தது. பாலாவுடைய நரைமுடி யைப் பார்த்துக் கவலைப்பட்டார்கள். சாயம் பூசுமாறுஅவரை நச்ரித்து இசைய வைத்து விட்டார்கள். உணவுக்கான மேலதிகச் செலவில் மிகச் சிக்கனமாகவே இருந்தார்கள். ஆனாலும் என்மீதுள்ள பரிவினால், அவ்வப் போது வெளியே சாப்பிடப் போவோம். பிரபாகரனும் அதற்கு இணங்குவார். வெவ்வேறு வகை உணவுகளைச் சுவை பார்ப்பதில் அவருக்கு ஆர்வம். அதிலும் வெளிநாட்டு உணவு வகை களில் தனி ஈடுபாடு உண்டு.

இந்தப் பயணத்தின் போது தான் உண்மையான போர் ஆயுதங்களுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. விடுத லைப் புலிகளோடும் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தோடும் நான் சம்பந்தப்பட்ட போது, எனக்கு உயிர் ஆபத்தைத் தேடிக் கொள்கிறேன் என்பதையும் நன்கு அறிந்திருந்தேன். ஒருவர் தமது உயிரை இழக்க நேரலாம் என்பதற்கு அவர் தயர் இல்லை. என்றால் ஆயுதப் போராட்டத்தில் அவர் தம்மை முழுமையாக அர்ப்ப ணிக்க முடியாது. நான் ஆயுதங்களைத் தொட்டுத் தூக்கிய போது, போராட்டத்தில் அது ஒரு தேவையான பங்கு என்றா லும், தற்காப்புக்கும், விடுதலைக்குமான ஊடகமாகவே நான் ஆயுதத்தை மதித்தேன். தமிழ் மக்களின் போராட்டத்தில் ஆயுதம் மிகவும் முக்கியமானது. பிரபாகரன், ரகு, பண்டிதர், பேபி எல்லோருமே பாதுகாப்பு நோக்கத்திற்காக றிவோல்வர் (பிஸ்ரல்) தரித்திருந்தார்கள். அவர்களிடம் கனரகத் துப்பாக்கிகளும் இருந்தன. "அன்ரிக்கும்" இலக்குப் பயிற்சி தரத் தீர்மானித்தார்கள். அதற்கு, முதலில் மறைவிடங்க ளில் இருந்து துப்பாக் கிகளை மீட்டு வர வேண்டும். இதற்காக ரகுவும் பண்டி தரும் போனார்கள். நாம் சந்திக்க வேண்டிய இடத்துக்கு அவர் கள் வந்த போது இரண்டு அப்பாவி இளைஞர் களையே அவர்களில் கண்டேன். புதினத் தாளிலே சுற்றிய இரண்டு பொதிகள் கையிலே தொங்க எதிலுமே அக்கறை இல்லாதவர்கள் போல் அமைதியாக வந்தார் கள். நன்கு மறைக்கப்பட்ட ஆயுதங்களேஅந்தப் பொதிகள். நான் எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டேன். தேடப்பட்டு வரும் "இரண்டு பயங்கரவாதிகள்" சென்னைக்கு சிலமைல் வெளியே, தானியங்கித் துப்பாக்கிகளோடு தங்கள் இலக்குப் பயிற்சிக் காக சென்று கொண்டிருப் பதை பார்த்திருந்தால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று ஒரு கணம் சிந்தித்தேன். சென்னைக் குத் தெற்கே கரையோரமாக, சில மைல் தூரம் பயணம் செய்தோம்.

(பதிவு தொடரும்)




### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அடகு வைத்த பொருட்களை மீட்பதற்காக, பணவசதி திருப்திகர அளவில் கிடைக்கும். அக்கம் பக்கத்தவரின் அன்பு, ஆதரவினால் மனம் நெகிழ்வீர்கள். சிலருக்கு, புதிய வாகனம் வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரர் அறிவுத் திறன் வளர்ந்து படிப்பில் முன்னேற்றம் காண்பர். எதிர்மறையாக இருந்த செயல், அனுகூலம் தருவதாக மாறும். இல்லறத்துணையின் கருத்துக்கு, உரிய முக்கியத்துவம் தரவேண்டும். தொழில், வியாபார நடைமுறை வளர்ச்சி சுகமாக இருக்கும். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலைவாய்ப்பு சம்பள உயர்வு கிடைக்கும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு தர்மகர்ம ஸ்தான அதிபதியாகிய சனிபகவான், ராசிக்கு ஆறாம் இடமான சுக்கிரன் வீட்டிலும், சுக்கிரன் சனி வீட்டிலுமாக பரிவர்த்தனையாக அமைந்து யோக பலன் தருகின்றனர். குரு, ராகு, சூரியன், புதனும் சிறப்பான பலன்களை வழங்குகின்றனர். உங்கள் பேச்சு, செயலில் வசீகரம் உருவாகும். புதியவர்களின் நட்பு, உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வியல் நடைமுறை இருக்கும்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

கடந்த நாட்களில் சரி என கருதி, எடுத்த சில முடிவுகளை, மறு பரிசீலனை செய்கிற எண்ணம் கொள்வீர்கள். உங்கள் நலனில் அக்கறை உள்ளவரின் ஆலோசனையையும் கேட்பது நல்லது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, மருத்துவசிகிச்சை தேவைப்படலாம். தொழிலில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறையை பின்பற்றுவீர்கள். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

ஆடம்பர சிந்தனைகளினால், பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள். இதனால், சிலரது பரிகாசம் நிறைந்த பேச்சுக்களை எதிர்கொள்ள நேரிடலாம். இளைய சகோதரர் உதவிகரமாக செயல்படுவர். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரரின் கருணை மிகுந்த செயல் பெருமை தேடித் தரும். இல்லறத்துணையின் கவனக்குறைவான பணிகளை பெருந்தன்மையுடன் சரிசெய்வதால், குடும்ப ஒற்றுமை வளரும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

உடன் பிறந்தவர்களுக்கான மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உருவாகும். வீடு, வாகன பாதுகாப்பில், கூடுதல் கவனம் வேண்டும். இஷ்ட தெய்வ அருள் பலத்தினால், புத்திரரின் எதிர்கால தேவையான பணிகளை நிறை வேற்றுவீர்கள். இல்லறத்துணையின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். தொழில், வியாபா ரத்தில் லாப விகிதம் குறைத்து உற்பத்தி, விற்பனையில் இலக்கை அடைவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் இருக்கும். பெண்கள், கணவர் வழிசார்ந்த உறவினர் செயலை விமர்சிக்க வேண்டாம்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

செயல்களில் லட்சியத்தின் வெளிப்பாடு மிகுந்திருக்கும். பேசுவதில் நிதானம் பின்பற்றுவதால், நற்பெயரை பாதுகாக்கலாம். உடன் பிறந்தவர்களுக்கான மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உருவாகும். வீடு, வாகன பாதுகாப்பில், கூடுதல் கவனம் வேண்டும். இஷ்ட தெய்வ அருள் பலத்தினால், புத்திரரின் எதிர்கால தேவையான பணிகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்ப்பாளரால் உருவாகிய தொந்தரவு பலமிழக்கும். இல்லறத் துணையின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். பணியாளர்களுக்கு சலுகை கிடைப்பதில் தாமதம் இருக்கும். பெண்கள், கணவர் வழிசார்ந்த உறவினர் செயலை விமர்சிக்க வேண்டாம்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உங்கள் ராசிக்கு தனம், சவுபாக்ய ஸ்தான அதிபதியாகிய சுக்கிரன், ஐந்தாம் இடத்தில் அனுகூலமாக உள்ளார். ஆறாம் இடத்தில், ஆதித்யயோக பலத்துடன் சூரியன், புதன் செயல்படுகின்றனர். மதிநுட்பத்துடன் பணிபுரிந்து, எதிர்காலத்தில் பெற வேண்டிய நன்மையை உறுதி செய்வீர்கள். உங்கள் சொல்லுக்கு மரியாதை தருபவரிடம் மட்டும், பொது விஷயம் பேசலாம். வீட்டிற்கு வரும், உறவினர்களை உபசரிப்பதில் தாமதம், தயக்கம் உருவாகாமல், உரியஅன்பு பாராட்ட வேண்டும்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம்பாதம், அனுஷம், கேட்டை**

சுபநிகழ்ச்சி நடத்துவதிலும், கலந்து கொள்வதிலும் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் ஆலோசனை உதவி, மனதில் நம்பிக்கையை அதிகரிக்கும். வாகனத்தில் பராமரிப்பு செய்வதால், பயணமுறை எளிதாகும். புத்திரரின் அதிருப்தி மனம் சரி செய்ய ஆறுதலாக செயல்படுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணை ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். புதனின் அனுகூல அமர்வு, குடும்பத்தில் மங்கல நிகழ்வை உருவாக்கும். தொழில், வியாபாரததில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல், பின்பற்ற வேண்டும்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

நீங்கள் பேசும் வார்த்தை இனியவையாக அமைந்து, பழகுபவர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதை பெற்றுத் தரும். சூரியன், குரு, சனி, ராகு அளப்பரிய நற்பலன்களை வழங்குகின்றனர். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். புத்திரரின் செயல்களை கண்காணித்து, உரிய வழி காட்டுதல் தருவது அவசியம். பணக்கடனில், ஒரு பகுதி செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அபரிமிதமாகும். அரசியல்வாதிகள் பொறுப்பான பதவி பெற அனுகூலம் உண்டு. குடும்ப பெண்கள், விதவிதமான உணவு தயாரித்து உபசரிப்பர்.

### மகரம்

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதம்**

உங்கள் ராசியில் உள்ள, சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகம் சந்திரன் மட்டுமே, இந்த வாரம், நற்பலன் வழங்குகின்றனர். எந்த செயலையும், உரிய பரிசீலனைக்கு பின் மேற்கொள்வது நற்பலன் பெற உதவும். புதிய இனங்களில், பணச்செலவு ஏற்படுவ தால், சேமிப்பு குறைவதும், பணம் கடன் பெறுவதுமான நிலைமை இருக்கும். அக்கம் பக்கத்தவரின் விவகாரங்களில் கருத்து கூற வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர், உங்களின் தியாக குணத்தை உணர்ந்து கொள்வர். தொழில், வியாபாரத் தில் உருவாகிற, இடையூறு தாமதமின்றி சரி செய்யவும். பெண்கள், நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

### கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

வாழ்வில் தடையாக இருந்த சில விஷயங்கள் விலகி நன்மை உருவாகும். உறவினர்களிடம் பேசுவதில் அலட்சிய குணம் தவிர்ப்பது நல்லது. வீடு, வாகனத்தில் திருப்திகர நிலை உண்டு. புத்திரரின் சொல்லும், செயலும் சிறப்பாக அமைந்து மகிழ்ச்சி தரும். சத்து நிறைந்த உணவு வகைகளை உண்பதால், உடல்நலம் சீராக இருக்கும். இல்லறத்துணை நல்அன்பு பாராட்டுவர். தொழிலில் வளர்ச்சி பெற, மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள். பணியாளர்கள், பணியிடத்தில் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

பொது இடங்களில், நண்பரிடம் அதிக நேரம் பேசுவது, நிகழ்வுகளை வேடிக்கை பார்ப்பது தவிர்ப்பதால், மன அமைதி பாதுகாக்கலாம். பணிகள் நிறைவேற உருவாகிற, புதிய வாய்ப்பை தவறாமல் பயன்படுத்த வேண்டும். வீடு, வாகன பாதுகாப்பில், கூடுதல் கவனம் வேண்டும். மகளின் ஜாதக யோக பலம் முக்கியமான செயல் நிறைவேற துணை நிற்கும். ஓய்வு எடுப்பதற்கான நேரம் குறைவாக இருக்கும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை மனதிற்கு ஊக்கம் தரும். தொழில், வியாபார நடை முறை சிறக்க, சிலமாற்றம் பின்பற்ற வேண்டியதிருக்கும். பணியாளர் உடல்நலம் பேணுவதால், பணியில் ஆர்வம் வளரும். பெண்கள், குடும்ப நலன் சிறக்க, தேவையான பணி மேற்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயத் தீவில்

## மந்திரக் கிழவி




தம்மை பிடிப்பதற்காக நெருங்கும் பூதகணங்களைத் தாக்குவதற்கு இளவரசர்களும் ஆயத்தமாகினர். போர்க்கூச்சலிட்ட படி இந்திரவர்மனும் சந்திரவர்மனும் திரண்டு வந்த பூத கணங்களுக்கிடையே சரேலென உள்நுழைந்தனர். இளவரசர்களின் இந்தத் திடீர் உள்நுழைவைப் பூத கணங்கள் எதிர்பார்க்கவில்லை. பூத கணங்களை தம்முடைய அற்புத சக்தி கொண்ட வாள்களால் வீழ்த்தத் தொடங்கினர் இந்திரவர்மனும் சந்திரவர்மனும். அவர்களின் தாக்குதலில் இருந்து பூதகணங்கள் சுதாகரிப்பதற்குள் ஏனைய இளவரசர்களும் தம் பங்குக்குப் பூத கணங்களைச் சுற்றிவளைத்துத் தாக்கத் தொடங்கினர். மலைகள் சாய்வது போல பூதகணங்கள் ஒவ்வொன்றாகப் பெரும் ஓசையோடு கீழே விழத் தொடங்கின. இதனால் பெரும் புழுதிப்படலம் அந்த இடம் எங்கும் எழத் தொடங்கியது. புழுதி கண்களை மறைத்ததால் பூத கணங்களுக்குத் என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னுடைய அடிமைகள் தன் கண்முன்னாலேயே சிறு பாலகர்களிடம் வீழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ட மந்திரக்கிழவி பற்களை நறநற வெனக் கடித்தபடி மந்திரக் கோலை வெளியே எடுத்தாள். அதற்கிடையில் பூதகணங்கள் எல்லாமே இளவரசர்களின் அற்புத வாள்களின் சக்திக்கு முன்னால் ஈடு கொடுக்க முடியாது மடிந்திருந்தன. இளவரசர்களிடையே பூதகணங்களை வென்றதால் பெரும் ஆனந்தம் எழுந்தது. அவர்கள் தமது வெற்றியை வாள்களை உயரத் தூக்கி மகிழ்ச்சி ஆரவாரமிட்டுக் கொண்டாடத் தொடங்கினர். இது தான் தக்க சமயம் என எண்ணிய மாயக்கிழவி மந்திரக் கோலை எடுத்து ஏதோ சில மந்திரங்களை முணுமுணுத்த படி பலமாக அசைத்தாள். அதிலிருந்து இளம்பச்சை நிறப் புகையொன்று புறப்பட்டு இளவரசர்களை நோக்கி விரைந்தது.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

## காந்தி சொன்ன 7~ பாவங்கள்

*1-கொள்கை இல்லாத அரசியல்*
*2-உழைப்பில்லாத ஊதியம்*
*3-ஒழுக்க மில்லாத கல்வி*
*4-தியாகமில்லாத கல்வி*
*5-மனசாட்சி இல்லாத இன்பம்*
*6-மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்*
*7-நேர்மையற்ற வியாபாரம்*




3 தோழர்கள் ஒரு இரவு விடுதியில் வாடகைக்கு அறை கேட்க உரிமையாளர் 30ரூபா என்று தெரிவிக்கிறார். அவர்கள் அதனை ஏற்று நபருக்கு 10 ரூபா வீதம் கொடுத்தனர். அவர்கள் அறைக்கு சென்று 30 நிமிடங்கள் கழித்து உரிமையாளர் தான் 5 ரூபா அதிகமாக அறவிட்டதை உணர்ந்து மீதி 5 ரூபாவை வேலையாளிடம் கொடுத்து அனுப்பினார். 3 தோழர்களும் 5 ரூபாவை சமமாக பிரிக்க முடியாததால் தலா 1 ரூபா வீதம் எடுத்து மீதி 2 ரூபாவை இனாமாக வேலையாளிடம் கொடுத் தனர். இப்போது தோழர்கள் ஒவ்வொருவரும் தலா 9 ரூபா வீதம் 9 X3 = 27 ரூபாவும் வேலையாளிடம் 2 ரூபாவும் கொடுத்துள்ளனர். ஆக மொத்தம் 29 ஆகின்றது. மீதி 1 க்கு என்னவாயிற்று.

**இலகுவான விடை மூளைக்கு வேலை புதிர்**

■ ஆரம்பத்தில் வாடகை 30 ரூபா. ஆதலால் வேலையாளிக்கும் நபருக்கும் மீதி 0 ஆகும்.

■ உரிமையாளர் 5 ரூபா கொடுத்த பின் உரிமையாளரிடம் 25 ரூபாவும் தோழர் களிடம் தலா 1 ரூபாவும் வேலையாளியிடம் 2 ரூபாவும் உள்ளன.

■ 25+1+1+1+2=30 சரியாக உள்ளது.

## கணக்குப் புதிர்

■ ஒருத்தர் தன்னோட பிள்ளைகளுக்கு பொம்மை வாங்கப் போனார். அவர் கையில் நூறு ரூபாய் வச்சிருந்தார்.

■ ஒரு யானை பொம்மையின் விலை 5 ரூபாய், குதிரை பொம்மை விலை ஒரு ரூபா. ஒரு நாய்க்குட்டியின் விலை இருபத்தஞ்சு சதம்.

■ அவர் மொத்தமாக நூறு பொம்மைகளை நூறு ரூபாக்கு வாங்கியிருந்தால் ஒவ்வொன்றிலும் எத்தனை பொம்மைகள் வாங்கியிருப்பார்?

**விடை**

*யானை பொம்மை 3, நாய்க்குட்டி பொம்மை 16*
*குதிரை பொம்மை 81*

1. 1லிருந்து 10க்குள் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள்.
2. அதை 9 ஆல் பெருக்குங்கள்.
3. வந்த விடையிலிருந்து 5 ஐக் கழியுங்கள்.
4. அந்த எண்ணின் இலக்கங்களைக் கூட்டி ஒற்றை இலக்க எண்ணாக மாற்றிக் கொள்ளுங்கள்.
5. அதற்குப் பொருத்தமான ஆங்கில எழுத்தைக் கண்டுபிடியுங்கள் A=1, B=2, C=3, D=4, என்பதுபோல.
6. அந்த ஆங்கில எழுத்தில் தொடங்கும் ஒரு நாட்டை நினைத்துக் கொள்ளுங்கள்.
7. அந்த நாட்டின் பெயரில் உள்ள ஆங்கில இரண்டாவது எழுத்தில் தொடங்கும் ஒரு மிருகத்தை நினைத்துக்கொள்ளுங்கள்.

**இப்போது, நீங்கள் நினைத்த நாடு டென்மார்க். நினைத்த மிருகம் யானை தானே?**

## கல்லெறிந்தவனுக்கும் கருணை

அந்த நாட்டுக்கு மகான் ஒருவர் வந்தார். அவரைத் தரிசிக்க பெரும் கூட்டம் திரள்கிறது என்பதை அறிந்த அந்த நாட்டு மன்னனுக்குப் பொறாமை. 'பண பலமும் அதிகார பலமும் கொண்ட தன்னை விட, அந்த மகான் எந்த விதத்தில் உயர்ந்தவர்?' என்று எண்ணியவன், இது பற்றி அறிய



**குட்டிக்கதை**

மாறு வேடத்தில், மகானின் இருப்பிடத்துக்குச் சென்றான். அங்கு, மரத்தடியில் அமர்ந்து அருளாசி வழங்கிக் கொண்டிருந்தார் மகான். அப்போது, திடீரென்று பறந்து வந்த கல் ஒன்று மகானின் நெற்றியை பதம் பார்த்தது. கூட்டத்தினர் கல்லெறிந்தவனைப் பிடித்து, தண்டிக்க முற்பட்டபோது, மகான் தடுத்தார்.

''ஏனப்பா என் மேல் கல்லெறிந்தாய்?'' என்று அவனைப் பார்த்துக்கேட்டார் மகான். அவன், ''பழம் பறிப்பதற்காகக் கல் எறிந்தேன். அது, தங்கள் மேல் விழுந்து விட்டது!'' என்றான். அவனை ஆறுதலுடன் அணைத்துக் கொண்ட மகான், சுற்றி இருப்பவர்களைப் பார்த்துக் கூறினார்: ''பாருங்கள்... தன் மேல் கல்லெறிந்தவனுக்கு, பழங்களைத் தருகிறது மரம். நாம் மட்டும் தண்டனை தரலாமா?''

'பகைவனுக்கு அருளும் நல்லுள்ளம் உடையவரே உண்மையில் உயர்ந்தவர்!' என்பது அந்த மன்னனுக்குப் புரிந்தது.

## விடுகதைகளும் விடைகளும்

01. சின்னப்பயல். உரசினால் சீறிப் பாய்வான். அது என்ன?
-தீக்குச்சி-

02. வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?
-பாம்பு-

03. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?
-கண் இமை-

04. வளைந்து நெளிந்து செல்பவள். வழியெங்கும் தாகம் தீர்ப்பாள். அவள் யார்?
- ஆறு அல்லது அருவி-

05. அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள். அவள் யார்?
-வெங்காயம்-

06. வளைஞ்சு நெளிஞ்சு ஆடும். தண்ணீர் குடித்தால் சாகும். அது என்ன?
-நெருப்பு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் நடந்த உண்மைச் சம்பவம்

# கர்ப்பக்கிரகத்தில் காமப் பூசை



**கா**லை நேரத்துச் சோம்பல் இன்னமும் முறியவில்லை. இரவு பெய்த பனியும் முற்றாக விலகி யிருக்கவில்லை. காலை 8 மணி தாண்டியிருந்ததால் வீதியில் சனநடமாட்டமும் குறைவாக இருந்தது.

தென்மராட்சியில் உள்ள அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள தனது வளவில் நின்றிருந்த ஒருவரின் கவனத்தை ஈர்த்தது உறுமிக்கொண்டு சென்ற மோட்டார் சைக்கிள். வளவுக்குள் நின்றவர் வேறுயாரு மில்லை. அந்தக் கோயிலின் பரிபாலன சபைத் தலைவர்தான். அந்த மோட்டார் சைக்கிள் அவரின் கவனத்தை ஈர்த்ததற்கு காரணம் இருக்கவே செய்தது. மோட்டார் சைக்கிளில் சென்றவர் அந்த ஆலயத்துப் பூசகர். ஆனால் அவரின் பின்னால் பாடசாலைச் சீருடையோடு 13 வயதுடைய மாணவி ஒருத்தி அமர்ந்திருந்தது அவருக்கு உறுத்தலாக இருந்தது.

ஏதோ ஒன்று மனதை நெருட சைக்கிளை எடுத்துக்கொண்டு ஆலயப்பக்கமாக நகர்ந்தார்.

அங்கே –

மோட்டார் சைக்கிளை நிறுத்திய பூசகர் ஆலயக் கதவைத்திறந்துகொண்டு மாணவியையும் உள்ளே அழைத்துச் சென்றார். காலை நேரம் என்பதால் கோயிலில் யாருமே இருக்கவில்லை. வழமையாக அந்தக் கோயிலில் காலைப் பூசை இடம்பெறுவதில்லை. ஆலயத்துக்குள் நுழைந்தவுடனேயே பூசகர் கதவை இறுகப்பூட்டிவிட்டார். இதனைத் தூரத்தே நின்று நோட்டமிட்ட கோயில் தலைவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"பூட்டிய ஆலயத்துக்குள் ஐயருக்கு மாணவியோடு என்ன அலுவல்?" என்ற எண்ணம் அவரது மனதைக் குடைந்தது. உடனடியாகவே அவர் செயலில் இறங்கினார். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு எல்லாம் அறிவித்து ஆலயத்துக்கு முன்னால் திரளச் செய்தார். கிராம சேவையாளருக்கும் பொலிஸுக்கும் தகவல் பறந்தது. பின்னர் பூட்டப்பட்ட கதவை எல்லோரும் பலமாகத் தட்டினர்.

ஊசவம். கதவு திறக்கவே இல்லை. வேறு வழியின்றி பூட்டை உடைத்துக்கொண்டு எல்லோரும் உள்நுழைந்தனர்.

உள்ளே கண்ட காட்சி அனைவரையும் திடுக்கிட வைத்தது. ஆலய கருவறைக்குள்ளிருந்து பூசகர் பதைபதைத்தபடி வெளியே ஓடிவந்தார். கருவறைக்குள் ஆடைகள் அரை குறையாகக் களையப்பட்ட நிலையில் மாணவி படுக்க வைக்கப்பட்டிருந்தாள். கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பூசகரைத் திரண்டு வந்தவர்கள் நன்றாகக் கவனித்தார்கள். அப்படியே அவரை விலங்கிட்டு ஜீப்பில் ஏற்றிக்கொண்டு பொலிஸார் விரைந்தனர். விசாரணையின் போதுதான் அதிர்ச்சியில் உறைய வைக்கும் பல உண்மைகள் வெளிவந்தன. பொலிஸாரின் கிடுக்குப்பிடி விசாரணையின்போது பூசகர் முன்னுக்குப் பின் முரணாகத் தகவல்களைச் சொல்லத் தொடங்கினார்.

"நான் அந்தப் பிள்ளைக்கு சித்தப்பா முறை. இப்பிடி எளிய வேலை செய்யமாட்டன்" என்றவர் இன்னொரு கேள்விக்கு,

"அந்தப் பிள்ளைக்கு நான்தான் மாமா" என்று உறவுமுறையில் திடீர்மாற்றத்தை ஏற்படுத்தினார். இந்தக் குழப்பமான வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்த இன்னொரு கதையை எடுத்துவிட்டார்.

"நான் பரிகார பூசை செய்யத்தான் அந்தப் பிள்ளைய உள்ளுக்க கூட்டிக்கொண்டுபோனனான். வேற ஒண்டும் செய்யேல" என்ற வார்த்தையையே பூசகர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரை விசாரிப் பதைவிட வேறு கோணத்தில் தங்களுடைய புலனாய் வைப் பொலிஸார் முடுக்கிவிட்டார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமியிடம் எதுவும் விசாரிக்க முடிய வில்லை. அவள் திக் பிரமை பிடித்தவள் போல இருந்தாள். கேட்ட கேள்விக்கு சம்பந்தமேயில்லாத பதில்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள். வயதுக்கேற்ற அறிவுகூட இருக்க வில்லை. ஒரு ஐந்து வயதுப் பிள்ளையை ஒத்ததாகவே அவளுடைய செயற்பாடுகள் இருந்தன. சிறுமியின் தந்தை பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டார்.

> **'நான் பரிகாரப் பூசை செய்யத்தான் அந்தப் பிள்ளைய உள்ளுக்க கூட்டிக்கொண்டுபோனனான். வேற ஒண்டும் செய்யேல" என்ற வார்த்தையையே பூசகர் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார். அவரை விசாரிப் பதைவிட வேறு கோணத்தில் தங்களுடைய புலனாய் வைப் பொலிஸார் முடுக்கிவிட்டார்கள். பாதிக்கப்பட்ட சிறுமியிடம் எதுவும் விசாரிக்க முடிய வில்லை. அவள் திக் பிரமை பிடித்தவள் போல இருந்தாள். கேட்ட கேள்விக்கு வேறு ஏதோ பதில்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.**

"ஏன் உங்களுடைய பிள்ளையை பூசகரோடு கோயிலுக்கு அனுப்பினீர்கள்?" என்று பொலிஸார் அதட்டலாகக் கேட்டார்கள்.

"எனது பிள்ளைக்கு கல்வியில் நாட்டமில்லை. அதற்குப் பரிகாரம் செய்யத்தான் அனுப்பினேன். பூசகர் மீது எந்தத் தவறுமில்லை. அவர் அப்படிப்பட்ட தவறான நடத்தையில் ஈடுபடுபவருமல்ல." என்று பூசகருக்கு வக்காளத்துக்கு வாங்குவது போன்று சிறுமியின் தந்தை சொல்ல பொலிஸாருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார்கள். முடிவில் ஊரில் பூசகரைப் பற்றிய விபரங்களை மக்களிடம் திரட்டத் தொடங்கினார்கள்.

பூசகர் தனியே ஆலயப் பூசையோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. பேயோட்டுதல், பில்லி சூனியம் வைத்தல், சூனியங்களைத் தடுத்தல், பரிகார பூசை செய்தல், நினைத்த காரியம் சொல்லல் என்று ஒரு மந்திரவாதிபோல அந்த ஊரில் இயங்கி வந்திருக்கிறார். ஊரில் என்ன பிரச்சினை என்றாலும் பரிகாரம் தேடி இவரிடம் தான் ஓடுவார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமி சிறுவயதிலேயே தாயை இழந்த தினால் சற்று மந்த புத்தியுள்ளவளாகவே வளர்ந்துள் ளாள். வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இருந்தபோதும் உளவளர்ச்சி குன்றியதாகவே காணப்பட்டது. இதனால் எப்போதும் சிறுபிள்ளைத்தனமாக குழந்தைகளோடு விளையாடுவதும் தந்தையோடு செல்லம் கொஞ்சுவதுமே அவளது பிரதான செயற்பாடாக இருந்தது. பாடசாலைக்குச் செல்வதென்றால் பாகற்காய் போலக் கசந்தது. எல்லாப் பாடங்களிலும் மிகக் குறைவான புள்ளிகளே எடுத்தாள். .இந்த நேரத்தில்தான் பூசகரின் 'பரிகார பூசை' மகிமை பற்றி சிறுமியின் தந்தை அறிய நேர்ந்தது.

ஒருநாள் மகளோடு கோயிலுக்குப் போனார். அங்கே பூசகரிடம் "இவளுக்கு படிப்பென்றால் ஏறுதே யில்லை. நீங்கள்தான் ஏதாவது செய்யவேணும்" என்று வேண்டி நின்றார். பூசகரும் கண்ணை மூ[illegible] நிறைய மந்திரங்களை உச்சரித்தபடி சிறுமிக்கு விபூதி போட்டுவிட்டார்.

"இப்பிடி தொடர்ந்து ஆறு வெள்ளிக்கிழமை விபூதி போட்டால் பிள்ளை முதலாம் பிள்ளையா வாறமாதிரிப் படிப்பாள்" என்று தந்தைக்கு நம்பிக்கையூட்டினார் பூசகர். அந்த வர்த்தைகளை நம்பிய தந்தை தொடர்ச்சியாக ஆறுவாரங்கள் ஆலயத்துக்கு அழைத்துவந்து தன் பிள்ளைக்கு விபூதி போடச் செய்தார். ஆனால் அவளின் கற்றல் நடவடிக்கையில் எந்த முன்னேற்றமும் இல்லை. இது பூசகருக்கு அவமானமாக இருந்தது. கடைசி வெள்ளிக்கிழமை பூசகர் இருண்ட முகத்தோடு இருந்தார்.

"இது எனக்கே விளையாட்டுக்காட்டுது. நானும் சாதாரண தோசம் எண்டுதான் நினைச்சன். அதாலதான் அம்மனை நினைச்சு விபூதி போட்டுப்பாத்தன். ஆனால் விபூதிக்கும் இது அடங்குதில்லை. உங்கட குடும்பத்துக்கு யாரோ வேண்டாதவை வைச்ச சூனியம்தான் இப்பிடி ஆட்டிப்படைக்குது. இந்தப் பில்லி சூனியம் எல்லாம் விபூதிக்கு கட்டுப்படாது." என்று சொன்னார்.

"ஐயா! உங்களைத்தான் நம்பியிருக்கிறன். எப்பிடியாவது உந்[illegible] சூனியத்தில் இருந்து என்ர பிள்ளையை மீட்டுத்தாங்கோ" என்று தந்தை கெஞ்சத் தொடங்கினார். கொஞ்சநேரம் ஆலயத்தின் முகட்டைப் பார்ததபடி ஏதோ யோசித்த பூசகர் பின்னர் தந்தையை நோக்கித் திரும்பி,

"சரி இவ்வளவு கெஞ்சுறியள். அம்மனில பாரத்தைப்போட்டு வாற திங்கட்கிழமை காலமை பரிகார பூசை செய்வம். ஆனால் அதுக்கு இந்தப் பூமரம் மட்டும் (சிறுமியைச் சுட்டிக்காட்டி) கோயிலுக்குத் தனிய வரவேணும்" என்று அழுத்தம் திருத்தமாகச்சொன்னார். பில்லி சூனியத்தை இல்லாதொழிக்க தன் பிள்ளையை எங்கும் அனுப்பத் தயாராக இருந்த தந்தை இதற்கும் தலையாட்டினார்.

அதன்படியே அன்றுகாலை சிறுமியை வீட்டுக்கே சென்று ஏற்றிய பூசகர் யாருமில்லாத நேரம் பார்த்து ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றிருக்கிறார். பின்னர் வழமைபோலவே ஆலய வெளிப்புறமாக பூட்டுத் தெரியும்படி பூட்டிவிட்டுச் சிறுமியை கர்ப்பக்கிரகத்துக்குள் அழைத்துச் சென்றார். அங்கு அவளது ஆடைகள் சிலவற்றை களைந்துவிட்டு படுக்க வைத்திருக்கிறார். அதன் பின் தன் காம இச்சையைத் தீர்க்க அவர் முயன்ற சமயத்தில்தான் கோயில் கதவை படாரெனத்திறந்து கொண்டு ஊர்மக்கள் உள்ளே வந்திருக்கிறார்கள்.

முதலில் இதையெல்லாம் மறுத்த பூசகர், உண் மையை ஒத்துக்கொண்டால் தண்டனை குறையும் என்ற உறுதி மொழியால் நடந்தையெல்லாம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தார். ஆனால் அவருக்கு நீதிமன்றம் கடுமை யான தண்டனை விதிக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டபோதும் 21 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணத்து டனும் மூன்று மாதங்கள் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடனும் அவரை விடுவித்துவிட்டார்கள். இப் போது அந்தச் சிறுமியும் தந்தையும் தென்னிலங்கைப் பக்கமாகச் சென்றுவிட்டார்கள். ஆனால் மீண்டும் அதே ஊரில் தன் பரிகாரப் பூசைப் படலத்தை பூசகர் தொடர்ந்த படியே இருக்கிறார். அடுத்த பலிக் கடா யாரோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைகள் பலவிதம்: ஒவ்வொன்றும் ஒருவிதம்

**ஒவ்வொரு நாட்டிலும் குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகள் வேறுபடுகின்றன. குற்றம் செய்தவர்கள் திருந்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், செய்த குற்றத்துக்கு வருந்த வேண்டும் என்ற அடிப்படையிலும் தண்டனைகள் வழங்கப்படுவது வழக்கம். ஆனால், சில நாடுகளில் அவை கடுமையாக இருப்பதும் உண்டு. அதிலும் தலையை வெட்டுதல், பிறப்புறுப்புகளை வெட்டுதல் என்பன போன்ற நினைக்கவே முடியாத பயங்கரமான தண்டனைகள் நாகரிகம் மேலோங்கிவரும் காலகட்டத்திலும் சவூதி போன்ற அரேபிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இன்னமும் தீவிரத்தோடு வழங்கப்படவே செய்கின்றன.**

## ஈரான்

ஈரான் நாட்டில் ஒரு சம்பவம் அந்த நாட்டின் தண்டனைகளின் தீவிரத்தை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஷரீன் என்ற சிறுமி மீது ஜாம்ஷித் என்பவன் அசிற் வீசி விட்டான். இதனால், அந்தச் சிறுமியின் பார்வை பறிபோனது. அடையாளம் தெரியாத வகையில் சிறுமியின் முகம் சேதமடைந்து விட்டது.

கடந்த வருடம் சிறுமிக்கு நடந்த இந்தத் துயரச் சம்பவத்தை தொடர்ந்து அந்தநாட்டு மரபுப்படி கண்ணுக்கு கண் என்ற அடிப்படையில் குற்றவாளிக்கு தண்டனை வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதாவது குற்றவாளிக்கும் அதேபோன்று அசிற் வீசி,தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## கல்லெறிதல்

இது போன்ற கொடூரமான தண்டனைகள் பல்வேறு நாடுகளிலும் வழங்கப்படுகின்றன. சவுதி அரேபியா, சூடான், ஈரான், ஏமன், சோமாலியா மற்றும் நைஜீரியாவின் சில மாநிலங்கள் ஆகிய நாடுகளில் உள்ள கல்லெறிதல் தண்டனை முக்கியமானது

திருமணமான நபர் (ஆண் அல்லது பெண்) மற்றொரு திருமணமான நபருடன் முறைகேடான தொடர்பு வைத்திருத்தல் மற்றும் ஓரினச்சேர்க்கை ஆகிய குற்றங்களுக்காக இந்தத் தண்டனை வழங்கப்படுகிறது. இந்தத் தண்டனையின்போது கூட்டாக சேர்ந்து பலர் கல் எறிவதுண்டு.

கொடுமைப்படுத்தி தண்டனை நிறைவேற்றப்படும் இந்த முறைமையில் குறித்த நபர் உயிரிழக்கக் காரணமான கல்லை எறிந்தது யார் என்பதைக் கண்டறிய முடியாது. ஷரியா சட்டப்படி வழங்கப்படும் நீதி முறை இது என கூறப்படுகிறது.



## சோமாலியக் கொடுமை

*குர் ஆனில் கல் எறிவது குறித்துக் குறிப்பிடப்படவில்லை என்றாலும் இறை தூதர் முகமது இதனைக் கூறியுள்ளார் என்று இதன் ஆதரவாளர்கள் தங்கள் வாதத்தை முன் வைக்கின்றனர். சோமாலியா நாட்டில் வசித்த சிறுமி ஒருத்திக்கு வயது 13. அந்தச் சிறுமியை 3 பேர் கற்பழித்துள்ளனர். இந்தக் கொடுமையை அவள் அங்குள்ள அமைப்பு ஒன்றிடம் முறையிட்டாள். ஆனால் அந்த அமைப்பினர் அவளைத் தீண்டத்தகாதவளாகக் கருதி, தண்டனையை அவளுக்கு அளிக்க முடிவெடுத்தனர். 50 ஆண்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டனர்.அவளைக் கழுத்து வரை மண்ணில் புதைத்தனர்.*

*அவர்கள் கும்பலாக சிறுமி மீது கற்களை வீச தொடங்கினர். இதனை மைதானம் ஒன்றில் இருந்து 1,000 பேர் பார்வையாளர்கள் போல் பார்த்து கொண்டு இருந்தனர். ஒருவர் கூட அவளைக் காப்பாற்ற முன்வரவில்லை.*

## சூனியக்காரி

பப்புவா நியூ கினியா நாட்டில் சூனியக்காரி என்று கருதப்படும் சிலருக்கு கொடூரமான தண்டனை நிறைவேற்றப்படுவது உண்டு. அந்தநாட்டில் யாராவது மரணம் அடைந்து விட்டால் அதற்கு ஆதரவற்ற பெண்கள் யாரையாவது தேர்வு செய்து அவளுக்குச் சூனியக்காரி என்ற பட்டம் சூட்டி கொடுமை செய்து உயிருடன் எரித்து விடுவர்.

கடந்த வருடம் பெப்ரவரியில், சிறுவன் ஒருவன் நோய்ப் வாய்ப்பட்டு இறந்து விட்டான். அந்தச் சிறுவனின் உறவினர்கள். இதற்கு காரணம் சூனியக்காரிதான் என்று சுமார் 20 வயது நிறைந்த கெபாரி லெனியாடா என்ற இளம் தாயைக் கடுமையாகக் கொடுமைப்படுத்தி உள்ளனர்.

அவளது ஆடைகளை நீக்கி, கொடுமை செய்து. கார் ரயர்கள் மற்றும் குப்பைகள் மீது தீ வைத்து அதன்மேல் கெபாரியை உயிருடன் நிறுத்தி கொளுத்திக் கொன்று விட்டனர்.

சூனியம் செய்து கெபாரி அந்தச் சிறுவனை கொன்று விட்டாள் என அந்தநாட்டு மக்கள் நம்புகின்றனர்.

## மாறுகை மாறுகால் வாங்குதல்

சோமாலியா நாட்டில் திருடுபர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மாறு கை மாறு கால் வாங்குவது தான். அந்தநாட்டில் செல்போன்கள் மற்றும் துப்பாக்கிகளைத் திருடிய குற்றத்திற்காக 4 பேர் கைது செய்யப்பட்டனர். ஷரியா நீதிமன்றம் அவர்கள் குற்றவாளிகள் என உறுதி செய்து தண்டனைக்கு உத்தரவிட்டது.

அதன்படி, அவர்களை பொது இடத்துக்கு கொண்டு வந்து நிறுத்தினர். 300 பேர் சுற்றி நின்று அவர்களை வேடிக்கை பார்த்து கொண்டு இருந்தனர். அவர்கள் முன்னிலையில், குற்றவாளிகளின் வலது கை மற்றும் இடது கால் வெட்டப்பட்டன.அதன்பின் சிகிச்சைக்காக அம்புலன்சில் அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



## சாட்டையடி

இது ரத்தம் சொட்ட சொட்ட வழங்கப்படும் தண்டனை வகையிலானது. கடத்தல், கொள்ளை, போதைப் பொருள் பயன்பாடு, சொத்துகளைச் சேதப்படுத்துதல், வன்முறையில் ஈடுபடுதல், பாலியல் வன்முறை, ஆயுதங்கள் வைத்திருத்தல் மற்றும் விசா காலம் முடிந்த பின்னரும் குறித்தநாட்டில் வசிக்கும் வெளிநாட்டினர் ஆகியோருக்கு இந்தத் தண்டனையைத்தான் பல நாடுகள் அரங்கேற்றுகின்றன.

சிங்கப்பூர், புரூனே, மலேசியா மற்றும் சில ஆபிரிக்க நாடுகளில் வழங்கப்படும் இந்தத் தண்டனையின்படி, அகலமான கரும்பு ஒன்றை எடுத்து, நீரில் ஊறவைப்பார்கள்.

இதனை மருத்துவ ரீதியாகக் கண்காணித்து தேர்வு செய்கின்றனர். அதன் பின் குற்றவாளியின் ஆடைகள் களையப்படும். அவரை மருத்துவர் ஒருவர் சோதனை செய்வார். அதன் பின்னர் குற்றவாளியின் பின்புறம் வேகமாக அதனை கொண்டு சாட்டையடி போன்று அடிப்பார்கள். குற்றத்துக்கு ஏற்றாற்போன்று அடிகளின் எண்ணிக்கை அமையும்.

தண்டனை வழங்கும் அதிகாரி ஒவ்வோர் அடிக்கும் 10 முதல் 15 செக்கன் இடைவெளி விடுவார். மூக்கில் இருந்து ரத்தம் வழிவது போன்று கடுமையான காயங்கள் ஏற்படும். இத்தகைய காயங்கள் ஆற ஒரு மாதம் கூட ஆகும். சில காயங்கள் குற்றவாளிக்கு தழும்பை ஏற்படுத்துவதும் உண்டு.


கடந்த 1994ஆம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டில் மைக்கேல் பே என்ற அமெரிக்க மாணவன் பல மோட்டார் சைக்கிள்களை சேதப்படுத்திய குற்றத்துக்காக அவனுக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டது. 6 அடிகள் என்று வழங்கப்பட்ட தண்டனையில் மைக்கேலுக்கு 4 அடிகள் கொடுக்கப்பட்டன. இந்த தண்டனைக்கு ஆளாகி உலகம் முழுவதும் ஊடகங்களுக்கு செய்தியாகி அப்பொழுது மைக்கேல் பிரபலமானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.சுபேதிகா
கொடிகாமம்

# தண்டனை



அண்ணன் தங்கைப் பாசத்துக்கு எடுத்துக் காட்டே சுதாகனும் சங்கவியும் தான். அந்தளவுக்கு சுதாங்கன் சங்கவி மீது அன்பு காட்டினான். சங்கவிக்கு சுதாங்கன் அண்ணன் மட்டுமல்ல தாய் தந்தை எல்லாமே அவன் தான்.

தாயும் தந்தையும் எதிர்பாராத விபத்தொன்றினால் ஒன்றாகவே இறைவனடி சேர்ந்தனர். பெற்றோரின் இழப்பையெண்ணி பிள்ளைகள் இருவரும் துடியாய்த் துடித்தனர். நாள்கள் நகர நகர துன்பத்திலிருந்து விடுபட்டு வாழத் தொடங்கினார்கள்.

சுதாங்கன் கூலி வேலை செய்து அந்தப் பணத்தைக்கொண்டுதங்கையைப் படிக்க வைத்தான். அண்ணன் தனக்காக கஷ்ரப்பட்டு உழைக்கிறான் என்பதை உணர்ந்த சங்கவியும் இரவு பகல் பாராது ஊன் உறக்கம் இல்லாது, நன்றாகப் படித்து நல்ல பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக் கழகம் சென்றாள். சங்கவி பல்கலைக்கழகம் செல்லப் போவதை நினைத்து சுதாங்கனும் கற்பனைக் கடலில் மிதந்தான்.

பல்கலைக்கழகத்தில் சங்கவியைப் தெரியாதவர்களே கிடையாது. அந்தளவிற்கு அவள் படிப்பில் திறமை காட்டியது மட்டுமல்லாமல் எல்லாருடனும் அன்பாகவும்பண்பாகவும் பழகினாள். பல்கலைக்கழக வாழ்க்கை சங்கவிக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

அந்த வகுப்பிலுள்ள மாணவர்களில் சுதன் பணக்காரன். அழகுள்ளவனும் கூட. எல்லா மாணவர்களையும் விட சுதன் சங்கவி மீது அதிக அக்கறை காட்டினான். சங்கவியின் குடும்ப நிலையை எண்ணி அவளுக்காகப் பரிதாபப்பட்டாள். எனவே சங்கவியும் அவனை நல்ல நண்பன் என நினைத்து நட்புடன் பழகி வந்தாள். நாள்கள் நகர நகர சுதன் சங்கவி இருவரினதும் நட்பு காதலாக மாறியது. சுதாங்கனும் தந்தையின் சந்தோசத்துக்காக அவர்களது காதலை எதிர்க்கவில்லை.

காலச் சக்கரம் உருண்டோடி பல்கலைக்கழக படிப்பு முடிந்து வெளியேறும் நாளும் நெருங்கியது. அன்று பல்கலைக்கழக வாழ்க்கையின் இறுதி நாள். அன்று பட்டமளிப்பு விழா. பல்கலைக்கழகம் விழாக்கோலம் பூண்டிருந்தது. சங்கவியும் பட்டமளிப்பு விழா முடிந்ததும் நண்பர்கள் எல்லோரையும் பிரிய மனமில்லாது கண்ணீருடன் பிரிந்து சென்றான்.

அன்று விழா முடிந்து வீடு திரும்பும் போது சுதன் சங்கவியிடம் வந்தாள். " இனியென்ன சங்கவி எங்கட படிப்பும் முடிஞ்சுது. வேலையும் விரைவாய் வந்திடும். எங்கட கலியாண வீட்டை எப்ப வைக்கலாம்?" என்றான். "எதுக்கும் அண்ணாவோட பேசி முடிவெடுப்பம் " என்றாள் சங்கவி. "திருமணம் பற்றி அண்ணா வோட பேச நாளைக்கு உங்கட வீட்டை வாறன்" என்று கூறி சுதன் சென்றான்.

சீதனத்தையே
மேலாக நினைக்கும்
மனிதர்கள் வாழும்
இவ் உலகில் வாழ்ந்து
அனுவானுவாகச்
சாவதை விட ஒரு
நாளிலேயே செத்து
விடுவது எனக்கு
நல்லது எனத்
தோன்றியது.

சங்கவிக்கோ ஒரே மகிழ்ச்சி. தன் அண்ணனிடம் " நாளைக்கு எங்கட வீட்ட சுதன் வருவார்" என்றாள். சுதாங்கனும் தங்கைக்கு திருமணம் நடக்கப் போவதை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைந்தான்.

மறுநாள் சுதன் கூறியவாறே சங்கவியின வீட்டிற்கு வந்தான். சுதாங்கனும் சங்கவியும் சுதனைக் கண்டவுடன் சந்தோசப்பட்டார்கள். இந்தச் சந்தோசம் இன்னும் சில நிமிடத்தில் இல்லாமல் போகும் என அவர்கள் அப்போது நினைக்கவில்லை. சுதன் இப்படியும் பேசுவான் என்று சுதாங்கனோ சங்கவியோ கனவில் கூட நினைக்கவில்லை.

சுதாங்கன் "நான் இப்ப உத்தியோக மாப்பிள்ளை. எனக்கு இப்ப எவ்வளவு சீதனம் எண்டு உங்களுக்குத் தெரியும் தானே. என்னுடைய பெற்றோர் குறைஞ்சது பதினைந்து லட்சமாவது எதிர்பார்க்கினம். அது தான் உங்களிட்ட பேசிட்டுப் போவம் எண்டு வந்தனான்" என்றான் சுதன். சுதாங்கனுக்கு இதைக் கேட்டவு டன் என்ன செய்வதென்றே புரியவில்லை. அவன் மௌனமாய் இருந்தான்.

என்ன சுதன் " சீதனத்திற்காகவா என்னைக் காதலிச்சீங்க. எங்களிட்ட பணம் இல்லையென்று உங்களுக்கு முதலே தெரியும் தெரியும்தானே. என்றாள் சங்கவி.

என்ன சங்கவி " இந்தக் காலத்தில சீதனம் இல்லாமல் கலியாணம் செய்ய யாரும் சம்மதிப்பாங்களா? உன் அண்ணனுக்கு கூட தங்கைக்கு சீதனம் கொடுக்க வேண்டும் என்று ஒரு யோசனை கூட வரவில்லையா. இந்தச் சீதனத்தை உங்களால தரமுடியாட்டா சொல்லுங்கோ நான் பெற்றோர்களின்விருப்பப்படியே சீதனத்தோட வேறு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்யிறன்" என்று கூறிச் சென்றான் சுதன்.

தன்னைவேதனைப்படுத்தியதுமட்டுமில்லாமல் தனக்காகவே கஷ்ரப்பட்டுஉழைக்கும்அண்ணனையும் சுதன் வேதனைப்படுத்தியதை நினைக்க சங்கவியால் தாங்க முடியவில்லை. இனி வாழ்வதை விட சாவதே மேல் என நினைத்து சுதாங்கன் வெளியே சென்ற நேரம் பார்த்துத் தற்கொலை செய்து கொண்டாள்.

வீட்டுக்கு வந்த சுதாங்கன் தங்கையைக் காணாது தங்கையின் அறையை திறந்தான். அங்கே சங்கவி இறந்து கிடந்தாள். ஓடிச் சென்று தங்கையின் மேல் விழுந்து அழுதான். அப்போது தான் சங்கவியின் அரு[illegible] கிடந்த கடிதத்தை சுதாங்கன் கண்டான். அதை வேகமாக விரித்து வாசித்தான்.

'உயிரிலும் மேலான அண்ணாவுக்கு, ஒரு மனிதனை விட சீதனத்தையே மேலாக நினைக்கும் மனிதர்கள் வாழும் இந்த உலகில் வாழ்ந்து அணுவாணுவாய்ச் சாவதை விட ஒரு நாளிலேயே செத்து விடுவது எனக்கு நல்லது எனத் தோன்றியது. அதனால் நான் தான் இந்த முடிவுக்கு வந்தேன். என்னால் உங்களுக்கு அவமானமும் வேதனையும் ஏற்பட்டுள்ளது. அண்ணா நான் உங்களுக்கு செய்த துரோகத்திற்கு மன்னிப்புக் கேட்டு மடலை முடிப்பதுடன் எனது வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்றேன். "இப்படிக்கு பாசமிகு தங்கை" என எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைவாசித்தவுடன்சுதாங்கனுக்கு சுதன் மேல் மிகுந்த ஆத்திரம் ஏற்பட்டது. தனக்கென்று இருந்த ஒரே உறவான தங்கையையும் இவனால் இல்லாமல் போய் விட்டாளே. எனது தங்கையி[illegible] வாழ்வை நாசமாக்கிய சுதனுக்கு நல்ல தண்டனை கொடுக்க வேண்டும் என நினைத்தவனாக சுதாங்கன் சுதன் வீடு நோக்கிச் செல்லனானான்.




சுதன் வீடு நோக்கி போய்க் கொண்டிருந்த சுதாங்கனை வீதியில் குழுமியிருந்த சனக்கூட்டம் இடைமறித்தது. ஏதொவொரு விபத்து நடந்து விட்டது என்று ஊகித்தவனாக சனக்கூட்டத்திற்குள் நுழைந்து சென்று பார்த்தான். சுதாங்கனுக்கு அந்த நொடிப் பொழுது தன் கண்களையே நம்ப முடியவில்லை. அங்கே சுதன் இரண்டு கால்களையும் இழந்தவனாக இரத்த வெள்ளத்தில் கிடந்தான். தனது தங்கைக்கு சுதன் செய்த நம்பிக்கை துரோகத்துக்கு தண்டனை கிடைத்து விட்டது என்று தனக்குள்ளே எண்ணியபடி தன்னுடைய வீடு நோக்கி திரும்பினான் சுதாங்கன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புடன் மாணவி



பாம்புகள் மீது விருப்பம்கொண்டு அவற்றுடன் வாழ்ந்து வருகின்றார் அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்த 9 வயதான கிறிஸ்டா குவாரினோ என்ற பாடசாலைச் சிறுமி.
சிறு வயதாக இருந்தாலும் பாம்புகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்துள்ளார் கிறிஸ்டா.
இவர் தனது வீட்டில் ஒரு அனகொண்டா மற்றும் 12 மலைப்பாம்புகள் உள்ளடங்கலாக 30 வகையான ஊர்வனவற்றை வளர்த்து வருகின்றார். அவற்றுடன் சாப்பிட்டு உறங்கி விளையாடியும் வருகிறார் கிறிஸ்டா.
பாம்புகள் தொடர்பில் வல்லுநரான கிறிஸ்டாவில் தந்தையான ஜெமியே கிறிஸ்டாவுக்கு 2 வயதாக இருக்கும்போது பாம்புகளை அறிமுகம்செய்து வைத்துள்ளார். தந்தையும் மகளும் வார இறுதியில் உலகின் அதி நச்சுவாய்ந்த ரெட்ல் பாம்பினை தேடி வருகின்றனர்.
கிறிஸ்டாவை சில தடவைகள் பாம்பு தீண்டியுள்ளபோதிலும் அவருக்கு எந்தவித பயமும் ஏற்படவில்லை.
இதுகுறித்து கிறிஸ்டா கூறுகையில், ஒரு நாள் உலகின் ஒவ்வொரு வகை ஊர்வனவற்றையும் சொந்தமாகக் கொண்டிருக்கவேண்டும் என நான் ஆசைப்படுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# கைகளில் ஓவியம் வரையும் பெண்

இங்கிலாந்தின் ஆர்லே என்ற கிராமத்தில் உள்ள வார்விக் ஷைர் பகுதியில் சாரா பீல்(43) எனும் பெண், தன் கணவர் மற்றும் 5 வயது குழந்தையுடன் வசித்து வருகிறார்.
இவருக்கு டெமாற்றோகிறபி என்ற தோல் வியாதி இருப்பதால், உடலில் லேசான கீறல் ஏதும் விழுந்தால் கூட உடனே தடிப்புகள் ஏற்பட்டு தோல் வீக்கமடைந்து விடுகிறது.
இதுகுறித்து சாரா கூறுகையில், மிகுந்த உணர்ச்சிமிக்க எனது



தோலி னால் அன்றாட வாழ்க்கையில் நான் உடைகள் அணியும் போது எரிவு ஏற்படுகிறது. சில நேரங்களில் அதிக எரிவு காரணமாக கண்ணாடி துண்டுகள் உடலை குத்துவது போல் வலி ஏற்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.
எனினும் இவர், தனது தோலில் உலோகத்தினால் ஓவியம் தீட்டிக்கொண்டு அதை படம்பிடித்து சமூகவலை தளத்தில் வெளியிட்டு வருவதால், சாரவின் நட்பு வட்டாரம் பெருகியுள்ளது.
இதுகுறித்து பிரிட்டிஷ் சங்கத்தின் தோல் மருத்துவர் மாத்யூ காஸ் கூறுகையில், இதற்கென பிரத்தியேகமான மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் இதுபோன்ற எரிவுகள் ஏற்படுவதை தவிர்க்கலாம் என கூறியுள்ளார்.

# நோய்களை நீக்க....



தென்னாபிரிக்காவில் காரன்குவா பகுதியில் வசிக்கும் மக்களிடம் லெசிகோ டேனியல் என்ற மத தலைவர், பூமியில் விளைவதை உண்பதன் வழியாக நாம் கடவுளுக்கு அருகில் நெருங்கி செல்வோம் என்றும் அது மதத்தின் பக்தியை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கும் எனவும் கூறியுள்ளார்.
இதனால் அங்கு வசிக்கும் மக்கள் புற்களை உட்கொள்ள ஆரம்பித்துவிட்டனர்.
அவர்களில் சிலர், தங்களது உடல் வியாதிகளான தொண்டை கரகரப்பு மற்றும் பக்கவாதம் போன்றவை இதனால் குணமாகியுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

# காதலர்களுக்கான முத்த யுத்தம்



வினோதங்களை நிகழ்த்தி வித்தை காட்டுவது, சீனர்களுக்கு ஒரு தனிக் கலை. சமீபத்தில் இங்குள்ள ஒரு தனியார் நிறுவனம், காதலர்களுக்காக வித்தியாசமான போட்டியை நடத்தியது. 'காதலர்கள், தங்கள் காதலியை தூக்கி வைத்து, முத்தம் கொடுக்க வேண்டும். யார் நீண்ட நேரம் முத்தம் கொடுக்கின்றனரோ, அவர்களுக்கு வைர மோதிரம் பரிசு' என அந்த நிறுவனம் கூறியிருந்தது.
ஏராளமான காதலர்கள், அந்த நிகழ்ச்சிக்கு குவிந்து விட்டனர். ஒரு சிலர், 'குண்டு' காதலிகளை தூக்க முடியாமல், ஒரு சில நிமிடங்களிலேயே, போட்டியிலிருந்து விலகி விட்டனர். மேலும், சிலருக்கு காதலிகளை தூக்க முடிந்தாலும், நீண்ட நேரம் முத்தம் கொடுக்க முடியாமல் போட்டியில் இருந்து வெளியேறிவிட்டனர். இறுதியில், ஒரே ஒரு ஜோடி மட்டுமே நீண்ட நேரம் தாக்குப் பிடித்து, வைர மோதிர பரிசை தட்டிச் சென்றது.

# இப்படியும் சாதனை



கணினி விசைப் பலகையில் தனது மூக்கினைப் பயன்படுத்தி மிக வேகமாக சொற்களை தட்டச்சு செய்து சாதனையை நிகழ்த்தியுள்ளார் இந்தியாவின் ஹைதரபாத்தை சேர்ந்த மொஹ்மட் குர்ஷித் ஹுசைன் என்ற 23 வயதான இளைஞன். இவர் ஆங்கிலத்திலுள்ள 26 எழுத்துக்களையும் [illegible]றும் 3.43 செக்கன்களுக்குள் தட்டச்சு செய்து அசத்தியிருக்கின்றார்.

# ஆடை அணிந்த ரயில்



ஆடைத் தயாரிப்பிலே கொடிகட்டிப் பறக்கும் போலந்து நாட்டைச் சேர்ந்த ஒலோக் என்பவர் தனது படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கு ரயிலுக்கு ஆடை செய்து ரயிலை வர்ண மயமாக்கியிருக்கிறார்.
வர்ணமயமான துணிகளை வாங்கி, ரயில் பெட்டிகளுக்கு ஏற்ற வகையில் உடைகளைத் தயாரித்து சில நாட்களிலேயே, தான் வடிவமைத்த உடையை, ரயிலுக்கு அணிவித்து, அதில், தன் குழுவினருடன் உற்சாகமாக வலம் வந்தார்.
இந்த வித்தியாசமான முயற்சி, அவரை சர்வ தேச அளவில், இன்று பிரபலமாக்கி விட் டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 மார்ச் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.